# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி 2017




ISSN 2055-6616

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
| --- | --- | --- |







திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா







ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton THISTLE HOTEL Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 25

# கலசம்
# KALASAM

ஒலி 85

www.saivamunnettasangam.com

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## பழக்கத்தை மாற்றவேண்டும்

ஒரு கோயில் வாசலிலே யானை நிற்கிறது. கோயிற் பிரசாதத்தை அதன் பாகன் அதற்கு ஊட்டுகிறான். அப்போது ஒரு கவளம் தவறிக் கீழே விழுகின்றது. அந்தக் கவளம் கீழே விழுந்ததனால் யானைக்கு எவ்வித நட்டமும் இல்லை. ஆனால் அப்படி வீழ்ந்த ஒரு கவளம் சோற்றைக் கோடிக்கணக்கான எறும்புகள் தம் சுற்றத்தோடு உண்டு பயனடைகின்றன.

**வாங்குங் கவளத் தொருசிறு வாய்தப்பின்**
**தூங்குங் களிறோ துயருறா - ஆங்கதுகொண்(டு)**
**ஊரும் எறும்பங் கொருகோடி யுய்யுமால்**
**ஆருங் கிளையோ டயின்று.**

இங்கிலாந்திலுள்ள கோயில்களிலே பிரசாதத்துடன் அளவுக்கதிகமாக உணவு கொடுக்கும் பழக்கமும் பரவி வருகின்றது. இலவசமாகக் கிடைப்பதாலும், பார்க்கும்போது உண்ணவேண்டும் என்று ஆவல் வருவதாலும் மக்கள் இந்த உணவை அளவுக்கதிகமாக எடுப்பதும், எடுத்ததை உண்ண இயலாமல், அல்லது கொண்டுபோக முடியாமற் கொட்டுவதும் அன்றாடம் காணக்கூடிய காட்சிகள்.

உணவை வீணாக்குபவர்களை; குப்பைத் தொட்டியிலே வீசுபவர்களை, ஏன் அப்படிச் செய்கின்றீர்கள்? என்று கேட்டால், பரிமாறுவோர் நிறையப் பரிமாறிவிட்டார்கள் என்று பதில் வரும். பரிமாறுபவர்களுக்கு, அவர்கள் பரிமாறும்போது, "போதும்" என்னும் வார்த்தையை நாம் வாய்திறந்து சொன்னால், அதற்குமேலும் பரிமாறுவார்களா என்பது தெரியவில்லை. நாம் எவ்வளவு உண்ணமுடியும் என்பது நமக்குத்தான் தெரியும்.

உணவை வீணாக்குவது மிகத்தவறான ஒரு செயல். உணவுப் பொருள்களை உருவாக்குவதில்; விளைவிப்பதில் பல மக்களின் உழைப்பு செலவிடப்பட்டிருக்கும். வீணாகும் உணவால் சூழலும் மாசுபடும். ஈழம், தமிழ்நாடு போன்ற ஊர்களிலே வீசும் உணவை மிருகங்கள், பறவைகள் உண்ணும். இந்த நாடுகளில் குப்பைத்தொட்டிகள்தான் வீசும் உணவுக்குத் தஞ்சம் அளிக்கின்றன.

அது ஒருபுறம் இருக்க, உலகின் பல பாகங்களில் மிகச்சிறிய பாலகர் முதல் முதியோர்வரை உணவின்றி வாடுவதையும் நாம் நவீன சாதனங்கள் மூலமாக, நம் வீட்டுக்குள்ளேயே பார்க்க முடிகின்றது. இவைகளை மனத்திருத்தி **இனியாவது உணவை வீணாக்கும் பழக்கத்தை நாம் நிறுத்துவோமா?**

# இந்த இதழில்


தவத்தின் பயன் - கந்தபுராணச் சிந்தனைகள் 03

சண்டேசுர நாயனார் - சிவபெருமானின் தத்துப் பிள்ளைகள் 3 05

இராமேஸ்வரம் - பயணக் கட்டுரை 07

இந்திரன் பழிதீர்த்த படலம் 12

வெளிச்சத்துக்கு வரும் சித்தர்கள் 14

தித்திக்கும் திருமந்திரம் 16

வாசகர் கடிதம் 19

சென்று தொழுமின்கள் 20

வள்ளுவர் என்ற வயித்தியர் 30

மாணவரின் கேள்வி 34

Hinduism in search of answers 35

கண்ணனும் தாத்தாவும் 42

Thirukural Stories 47


**அட்டைப்படம்: இலண்டன் முத்துமாரி அம்மன் கோயில்**

# கந்தபுராணச் சிந்தனைகள்

சிந்திப்பவர் Dr சிவலோகநாதன்

## தவத்தின் பயன்

தவம் என்பது விரதங்களினாலும், ஏனைய செய்கைகளினாலும், கட்டுப்பாடுகளினாலும் தனக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், மற்றைய உயிர்களுக்கு அன்பு காட்டுவதுமாகுமென்று வள்ளுவரின் குறளுக்குப் பரிமேலழகர் விளக்கம் கூறுகிறார்.

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு**

தவம் என்பது கட்டுப்பாட்டில் நிற்றல் எனப் பொருள்படும். தவத்தைப்பற்றி மேலும் சொல்லப் புகுந்த வள்ளுவர், மறுமைக்கண் தான் வேண்டியதை வேண்டியவாறே பெறுதலால், தவமானது அறிவுடையோரால் இம்மைக்கண் செய்யப்படும் என்கிறார். இதன்மூலம் தவத்தின் பயன் மறுமைக்கண்தான் பெறப்படும் என்கிறார் வள்ளுவர். மேலும்,

**இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்**

என்னும் குறள் மூலம் உலகத்திலே செல்வர்கள் சிலராகவும், வறியவர்கள் பலராகவும் இருப்பதற்குக் காரணம் தவம் செய்பவர் சிலராகவும், தவம் செய்யாதவர் பலராகவும் இருப்பதே என்று சொல்கிறார்.

பிரம்மதேவரின் மகனாகிய காசிபமுனிவரின் வாயிலாக, தவத்தைப்பற்றிக் கந்தபுராணம் சொல்கின்றது. காசிபர் தன்னுடைய பிள்ளைகளான சூரனுக்கும், சகோதரர்களுக்கும் கொடுத்த புத்திமதியாக இது தரப்படுகிறது. வலிமையை உள்ளதாக்குவது சிறந்த தவமே, அல்லாதது வேறு ஒன்றைச் சொல்லமுடியுமோ? இல்லை. அது சொல்வதற்கரிய சிவப்பேற்றைத் தரும், போற்றுவதானால் அத்தவத்தையே போற்ற வேண்டும்.

**ஆற்றலை யுளதுமா தவம தன்றியே**
**வீற்றுமொன் றுளதென விளம்ப லாகுமோ**
**சாற்றருஞ் சிவகதி தனையும் நல்குமால்**
**போற்றிடின் அனையதே போற்றல் வேண்டுமால்**

-காசிபனுதேசப்படலம்

இந்தத் தவமானது பிறவியை நீக்கி, மேலான வீடுபேற்றையும் தந்து தலைமையைத் தரும். இது மாத்திரமன்றி, இப்பிறவியில் வேண்டப்படும் இன்பங்களையும் மனத்தில் நினைத்தவாறு தரும் என்று கூறிய காசிபர் தொடர்ந்தும், "தவத்தைவிடச் சிறந்தபொருள் வேறு ஒன்று இல்லை. குற்றமற்ற சிறப்புடைய தவத்தைப் போன்ற பொருளும் வேறில்லை. தவத்திலும் அரியபொருளும் வேறில்லை. சொல்லப்போனால் தவத்திற்கு ஒப்பாவது தவமேயாகும்" என்று சொல்கிறார்.

**தவந்தனின் மிக்தொன் றில்லைத் தாவில்சீர்த்**
**தவந்தனை நேர்வது தானும் இல்லையால்**
**தவந்தனின் அரியதொன் றில்லைச் சாற்றிடில்**
**தவந்தனக் கொப்பது தவம தாகுமே**

\- காசிபனுபதேசப்படலம்

இவ்வாறு தவத்தினையும் அதன் பெருமைகளையும் பயனையும் விளக்கிய காசிபமுனிவர், தவத்தைச் செய்து, அத்தவத்தின் பயனாகக் காலனையும் வென்ற மார்க்கண்டேயரின் சரித்திரத்தை உதாரணங் காட்டுகிறார்.

தாம் செய்த தவத்தாலே மார்க்கண்டேயர் தவறாத விதியையும் வென்று, எமனது வலிமை யையும் அழித்து, அவனையும் அழித்து, பின் எக்காலத்தும் இறவாத தன்மையையும் பெற்றதைச் சொல்கிறார்.

சூரன் சிவனைநோக்கிச் செய்த பெருவேள்வியின் பயனாக, பல வரங்கள் பெறுகிறான். தேவர்களைச் சிறையிலிடுகிறான். தேவர்களைச் சிறைமீட்க முருகப்பெருமானின் தூதராக வீரவாகுத்தேவர் சூரனிடம் செல்கிறார். சூரனின் தலைநகரம் மகேந்திரபுரியின் வளத்தையும் மக்களின் வளமான வாழ்க்கையும் கண்ட வீரவாகுத்தேவர், பல தடவைகளில் அசுரர்களின் தலைவனான சூரன் செய்த தவத்தின் பெருவலிமையை வியக்கின்றார். உதாரணத்திற்கு ஒன்று, "பூமி செய்த தவத்தினால் உண்டானது என்று கூறத்தக்க மகேந்திரபுரி என்ற இந்த நகரத்தின் சிறப்பு இரண்டு என்ற எண்ணிக்கையுடைய கண்களை உடையவரால் காணும் எளிமை கொண்டதோ? இல்லை, அல்லது, வானுலகிலே இருப்பவர்களால் காணமுடியுமோ? அதுவும் இல்லை. இந்நகரைக் கண்கள் மிகுதியாகக் கொண்டவரல்லாது மற்றவரால் காணமுடியுமோ? முடியாது",

**மண்ப டைத்திடு தவமெனும் மகேந்திர மலிசேர்**
**எண்ப டைத்தகண் ணிரண்டினர் காணுதல் எளிதோ**
**விண்ப டைத்தவற் காயினும் அமையுமோ மிகவுங்**
**பண்ப டைத்தவர்க் கன்றியே கண்டிட லாமோ**

\- நகர்புகு படலம்

இவ்வாறாகத் தலைநகரின் சிறப்பைச் சொல்லுவதன்மூலம், அதன் சொந்தக்காரரான சூரனின் தவவலிமையைக் கந்தபுராணம் எடுத்துச் சொல்கிறது. இதனாலே கட்டுப்பாட்டில் நிற்றல் என்ற தவத்தை மிகவும் வலிமை வாய்ந்தவொரு சைவக்கலாசாரமாகக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.

**Whatsap இல் வந்தது........**

**பொதுநலம் என்பது புல்லாங்குழல் போன்றது. சுயநலம் என்பது காற்பந்து போன்றது. இரண்டுமே காற்றால் இயங்குபவை. ஆனால் ஒன்று முத்தமிடப்படுகின்றது. மற்றையது உதைக்கப்படுகின்றது. தான் வாங்கிய காற்றைத் தானே வைத்திருப்பதால் பந்து உதைபடுகின்றது. தான் வாங்கிய காற்றை இசையாக வெளிவிடுவதால் புல்லாங்குழல் முத்தமிடப்படுகின்றது.**

**தகவல்: ரவி**

## சிவபெருமான் தத்தெடுத்த மூன்று மக்கள்....3

# சண்டேசுர நாயனார்


இடைக்காடு சயம்பு

சிவபெருமான் தத்தெடுத்த மூன்று மக்கள் என்ற கட்டுரை வரிசையில், சுந்தரர் சரித்திரத்தையும் திருஞானசம்பந்தர் சரித்திரத்தையும் பார்த்தோம். இனி மூன்றாவது மகன் சண்டேசுர நாயனார் சரித்திரத்தைப் பார்ப்போம். சுந்தரமூர்த்தி நாயனார் மூல நூலாகப் பாடிய திருத்தொண்டர் தொகையில்:

**'வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த**
**அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்'**

என்று தொடக்கிவைத்தார். பாடலில் ஒன்றரை அடிகளால் சண்டேசுரர் நாயனாரைப் போற்றினார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரையும் இப்படியே போற்றினார். வேறு நாயன்மார்களை இந்தமாதிரிப் போற்றியதில்லை. பாடல் இப்படி அமைந்ததற்கு உரையாசிரியர் கொடுக்கும் விளக்கம் பின்வருமாறு:

"இறைவனாரது மகனாகப் பெற்ற பெருமை குறிக்க, முதல்நூல் இந்நாயனாரின் அடிமைத்திறத்தை ஒன்றரை அடிகளாற் புகழந்து போற்றிற்று"



சேய்ஞ்ஞலூரில் எச்சதத்தன், பவித்திரை என்னும் அந்தணத் தம்பதிக்கு மகனாக 'உதயஞ்செய்தார் விசாரசருமர்'. இவருக்கு ஐந்து வருடப் பருவத்திலேயே முற்பிறவியின் அறிவுத் தொடர்ச்சியாக வேத முதலிய கலைஞானங்கள் புரிந்தன. இவர் சீவன்முத்தராய் அவதரித்தார். ஏழு வயதில் இவரின் தந்தையாரே ஆசாரியராய் அமர்ந்து இவருக்கு உபநயனச் சடங்கு செய்துவைத்தார். பின் வேதபாடசாலைக்கு அனுப்பிவைத்தார்கள் பெற்றோர். அங்கு இவர் கற்றவேண்டியவை எதுவும் இல்லை என்றும், இவரே ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் தகுதி உடையவராகத் தோன்றினார் என்றும் ஆசிரியர்கள் கண்டு அதிசயித்துப் போற்றினார்கள். இருந்தாலும் விசாரசருமர் பாடசாலைக்குப் போய்க்கொண்டே இருந்தார். ஒரு நாள் பள்ளியினின்றும் வீடு திரும்பும் வேளையில், பசுமந்தையின் பின்னால் சில சிறுவர்கள் வந்துகொண்டிருந்தார்கள் . பசுக்காக்கும் இடையன் ஒரு பசுவைக் கோலால் அடித்ததைக்கண்டார் விசாரசருமர். உடனே பதைபதைத்துக் கோபித்துப் பசுவின் மேன்மை பற்றி நிறைய அறிவுரை கூறி, 'நீ இனிமேல் பசுமேய்க்க வரவேண்டாம். நான் மேய்ப்பேன். நீ ஓடிவிடு' என்று கூறினார். இடையன் அச் சிறுவனின் அறிவு நிறைவை உணர்ந்து பயந்து நீங்கிவிட்டான். விசாரசருமர் பசுக்களை ஓட்டிவந்து அவரவர் வீடுகளிலே போகவிட்டு, நடந்தவற்றை ஊரவர்களுக்குச் சொல்லி அவர்கள் சம்மதத்துடன் மறுநாள் முதல் பசுக்களை மேய்க்கத் தொடங்கினார். நல்ல புற்றரைகளைக் காட்டியும், தழைகளைக் கையாற்பறித்து ஊட்டியும், நல்ல தண்ணீர் நிலைகளைப் பார்த்துத் தாகம் தீரப்பண்ணியும், பழக்கப்பட்ட கருணையுள்ள இடையன்போலப் பசுக்களைக் காத்தார். பசுக்கள் முன்னையிலுங் கூடிய பால் கொடுத்தன. ஊரவர்கள் மகிழ்ந்து பாராட்டிவந்தார்கள். இந்தச் சிறியபிள்ளைப் பெரியார் பசுக்களைத்

தடவி அன்பு பாராட்டினார். பசுக்களுக்கு ஆறறிவு உண்டு. அவைகளும் இவரருகிற் செல்லும் வேளைகளில் கனைத்து உரசி அன்பைக் காட்டின. இப்படி யிருக்கும் நாளிலே, விசாரசருமர் ஓர் அற்புதத்தைக் கண்டார். சில பசுக்களை இவர் அண்மித்ததும் அவைகளின் முலைகளின்றும் பால் தானே சொரிந்து சிந்துவதைக் கண்டார். உடனே அவருக்கு முற்பிறவி ஞாபகத்தின் தொடராக ஓர் எண்ணம் உதித்தது. வீணாய்ப் போகிற பாலை எடுத்து சிவபூசை செய்யலாமே என்ற தெய்வீக எண்ணம் தோன்றிற்று. பால் கறக்க ஏற்ற பாத்திரங்களைச் சேகரித்து மேய்ச்சல் நிலத்தில் ஆற்றங்கரையில் வைத்தார். மணலினாற் கோயில் சமைத்துக் கருவறையில் மண்ணினாற் சிவலிங்கம் செய்து வைத்துக்கொண்டு பூக்கள் பறித்து வைத்தார். பின் பசுக்களின் அருகிலே போக, அவை கனைத்து அன்புகாட்டி நின்றன. முலை களைத் தொட்ட மாத்திரத்தில் பாலைச் சொரிந்தன. இவர் கறக்கவில்லை; தொட்டது மட்டுந்தான். இப்படிக் குடங்களிற் பாலைச் சேகரித்துப் பூசை செய்தார். ஒவ்வொரு நாளும் பத்தியோடு ஒன்றிநின்று வழிபட்டார். ஒரு நாள் அயலவன் ஒருவன் இந்தப் பூசையைக் கண்டான். விளையாட்டாகப் பையன் பாலைக்கறந்து சொரிகிறான் என்று ஊர் நீதிமன்றில் முறையிட்டுவிட்டுப் போய்விட்டான். நீதிமன்றமும் அவசரப்பட்டுத் தந்தை எச்சதத்னைக் கூப்பிட்டுக் கண்டித்தது. தந்தையும் பின்யோசனை, பகுத்தறிவு இல்லாதவர். மகனைத் தண்டிக்கவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்; மகனை விசாரிக்கவில்லை. மறுநாள் விசாரசருமர் பசுக்களுடன் மேய்ச்சல் காட்டுக்குப் போக, தானும் பின்னாற் போய் ஒரு மரத்தில் ஏறிப் பார்த்துக்காண்டிருந்தார். சிறிது நேரத்தில் பூசை தொடங்கிற்று. அபிஷேகம் செய்கிற நேரம் பால் சொரிவதைக்கண்டு பொறுக்கமுடியாமல் ஒரு கோல் கொண்டு மகனின் திருமுதுகில் பலமுறையும் புடைத்தார். இறைவனுடன் ஒன்றியிருந்த விசாரசருமர் அடித்ததை உணரவில்லை. தொடர்ந்து ஒவ்வொரு குடமாய்ப் பாலபிஷேகம் செய்துகொண்டேயிருந்தார். தந்தையானவர் மயக்கம் தலைக்கேறி பாற்குடங்களைக் காலால் உதைத்துச் சிதைத்தார். இப்பொழுது விசாரசருமருக்கு உணர்வு வந்தது. பாற்குடங்களைச் சிதைத்தது தந்தையென்றும் தெரிந்துகொண்டார். என்றாலும் இச்செய்கை மன்னிப்பற்ற சிவாபராதம்; தண்டிக்கவேண்டியது. இந்தக் கால்களை வெட்டவேண்டுமேயென்று நினைத்தார். ஆனால் அருகிலே அகப்பட்டது ஒரு கோல். அதனாற் புடைக்க ஓங்கினார். அந்தக் கோல் மழுவாகி எச்சதத்தனுடைய இரண்டு கால்களையும் துண்டித்துவிட்டது. உடனே எச்சதத்தன் இறந்துவிட்டார்.

இவ்விடத்தில் (பாடல் 1256) சேக்கிழார் தந்தை மகன் உறவைக் குறிப்பால் உணர்த்துகிறார். **'கோலெடுத்தார்க்கு அதுவே முறைமையினால் வந்து மழுவாயிட எறிந்தார்'** - முறைமை - தந்தை மகன் முறைமை. தந்தையின் கையிலுள்ள மழு மகனுக்கு உதவும். தந்தை எச்சதத்தன் வீழ்ந்து வீய்ந்தபின்னும் விசாரசருமர் பூசையைத் தொடர்ந்தார். தோன்றினார் மெய்யான தந்தை. **'தேவியோடும் விடையேறிக் காதல்கூர வெளிப்படலும் கண்டு தொழுது மனங்களித்து பாதமலர்மேல் விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனார்.'** வீழ்ந்து வணங்கிய மகனை எடுத்துநோக்கி, **'நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய், அடுத்த தாதை இனியுனக்கு நாம் என்றருள் செய்து அணைத்தருளி மடுத்த கருணையால் தடவி உச்சி மோந்து மகிழ்ந்தருள'** சிறுவனார் சிவமயமாய்ச் சூழ்ந்த ஒளியிற் தோன்றினார். மேலும் **'அடியவர்களுக்கு அதிபனாகிய சண்டீசர் பதம் உனக்குத் தந்தோம். எனது பூசை முடிவில் நாமுண்ட கலமும் சூடுவனவும் உனக்காகும். அடியார்கள் வழிபட்ட பயனை நீ அவர்களுக்கு அளிப்பாய்'** என்று இறைவர் கூறி அருளினார். தனது சடைக்கொன்றை மாலையைச் சூட்டினார். இப்பாடலில் **'உனக்காக'** என்றது தந்தையின் உரிமை மகனுக்காகும் என்ற குறிப்பு. 'மறைச்சிறுவர் அந்தவுடம்பு தன்னுடனே அரனார் மகனாராயினர்' சண்டீசப்பதத்தில் அமர்ந்துகொண்டார். பச்சைக்கூட்டோடு கயிலாயம் போன மூன்றாவது நாயனார் சண்டேசுர நாயனார்.

ஜோதி லிங்கத் தலங்கள்

# இராமேஸ்வரம்

சாவகச்சேரியூர் Dr கதிர்காமநாதன்

**இறைவர்: இராமநாதர்**
**இறைவி: பர்வதவர்த்தினி**

அப்பராலும் சுந்தரராலும் பாடப்பெற்ற தலம். அருணகிரிநாதர், தாயுமானவர், இராமலிங்கர் ஆகியோரும் பாடியுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றை முன்னர் எழுதியிருந்தேன். இன்னொன்றை இப்போது கூறுகிறேன். இது எமக்கு நேர்ந்த அநுபவம். மனைவியாரோடு இராமேஸ்வரம் சென்றேன். முதலில் கடலில் அக்கினி தீர்த்தத்தில் நீராடினோம். சீதை தனது புனிதத் தன்மையை நிரூபிக்க அக்கினியில் தீக்குளித்தார் என்பது வரலாறு. கற்புக்கரசி சீதையைச் சோதித்ததால் ஏற்பட்ட பாவம் தீர அக்கினிதேவன் நீராடிய இடமே அக்கினி தீர்த்தமாகும்.

பின்னர் 22 தீர்த்தங்களும் ஆடி, சுவாமி தரிசனம் செய்தோம். சிவாசாரியார் நாம் முன்னர் ஏற்பாடு செய்தபடி எதிர்பார்த்துக் காத்திருந்தார். எம்மை கூட்டிச்சென்று ஓர் இடத்தில் இருத்தினார். பின்னர் சங்கற்பம் செய்து, மந்திரங்களை ஓதினார். நம்மையும் ஓதும்படி சொன்னார். இருவருக்கும் மாலை அணிவித்தார். அவரது பூசை முடிந்ததும் எமை மாலை மாற்றும்படி கூறினார். இறைவன் சந்நிதியில் மாலை மாற்றியது மறுபடி திருமணம் செய்ததுபோன்று இருந்தது. இரு மாலைகளையும் பாம்பன் பாலத்தில் சில்லறைக் காசுடன் வீசவேண்டும் எனவும் கூறினார். நாமும் புதுத் தம்பதிபோன்று மாலை அணிந்தபடி கோயிலிலிருந்து கார் மட்டும் நடந்து சென்றோம். பாம்பன் பாலத்தில் அவர் சொன்னபடியே செய்தோம். கார் புறப்பட்டு ஒரு கிராமத்தினூடே செல்லும்போது சேவலொன்று குறுக்கே ஓடிவந்து அடிபட்டு இறந்தது. பலி போலும். அப்போது எனக்கு 60 வயதாகும். 60ஆண்டு நிறைவுத் திருமணம். இப்படியான மகிழ்ச்சிச்சம்பவம் இதற்கு முன்னும் பின்னும் நடைபெறவில்லை.

இராமேஸ்வரத்துக்கு மறுபடியும் செல்லும் பாக்கியம் இருவருடங்களின் பின்னர் கிடைத்தது. மாலை நேரத்தில்தான் சென்றோம்.

அர்த்தயாமப் பூசை - இராமசுவாமி மேள தாளத்துடன் பவனிவந்தார். நாங்கள் முதலே அம்பாள் கோயிலில் வரிசைக் கிரமத்தில் நின்றிருந்தோம். கட்டியம் கூறுமாப்போல் ஒருவர் முதல் வந்து மக்களை இருத்தி ஒழுங்குபடுத்தினார். சுவாமி பல்லக்கில் வந்து பள்ளியறை சென்றார். பின்னர் அம்பாளுடன் ஊஞ்சலாட்டம். யாவரும் முண்டியடித்துக் கொண்டு பார்த்தோம். இக் காட்சியை எதிரே இருக்கும் கண்ணாடியிலும் பார்க்கலாம். முடிவில் வாசனைச் சந்தனம், இனிய பால் தீர்த்தம், கடலைப்பருப்பு யாவும் பிரசாதமாக வழங்கப்பட்டது.


மறுநாட் காலை தீர்த்தங்கள் ஆடி சங்காபிஷேகம் செய்தோம். பிற்பகல் 4 மணிதான் அபிஷேகநேரம். ஆனால் இரவு ஏழு மணிக்குத்தான் ஆரம்பமாகியது. சங்குகள் யாவும் கருமையாக இருந்தன. கருமை பழமையைக் காட்டினாலும் அவற்றின் வெண்மை குறையவில்லை. எத்தனையோ மகான்கள், ஞானிகள், பெரியோர்கள் பயன்படுத்தி அபிஷேகம் செய்த அதே சங்குகளை நாமும் பயன்படுத்தி அபிஷேகம் செய்கிறோம் என்ற நினைவு வந்தபோது புல்லரித்தது. காசியிலிருந்து கொண்டுவந்த கங்கை நீரை, நூற்றெட்டுச் சங்குகளில் நிரப்பி அபிஷேகம் செய்தபோது மனம் மிகவும் மகிழ்வடைந்தது.

**சங்காபிஷேகம்:**

சங்குபோலத் தோற்றமளிக்கும் இராமேஸ் வரத்தில் சங்காபிஷேகம் செய்வது சாலப்

பொருந்தும். சங்கை ஏன் அபிஷேகத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்? 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்றொரு பாடலில் வருகிறது. பஞ்சபூதங்களின் தாக்கத்தால் சங்கின் தன்மையை மாற்றமுடியாது. எவ்வளவு காலம் இருந்தாலும் சங்கு தன்மை மாறாதது. நாமும் நமக்கு எவ்வளவு ஏற்றத்தாழ்வு வந்தாலும் இறைவன் மீதுள்ள பக்தி (சங்கு எவ்வாறு மாற்றமடையாதோ, அதுபோல) மாறாது இருக்கவேண்டும் என்பதே அதன் விளக்கம். சங்குக்குப் பவித்திர பாத்திரம் என்றொரு பெயருண்டு. அதில் ஊற்றப்படும் நீர் கங்கை நீருக்குச் சமமானது. மங்களம் தரும் சங்கை 54, 60, 64, 108, 1008 என்ற எண்ணிக்கையில் வைத்து அபிஷேகம் செய்வர். இவற்றை சங்கு வடிவில் அல்லது திரிசூல வடிவில் அல்லது தாமரை இலை வடிவில் அல்லது வில்வ இலைவடிவில் அமைத்து அடுக்குவர்.

இராமர் இராவணனைக் கொன்ற பாவம் தீர, இச் சிவலிங்கத்தை தாபித்து வழிபட்டதால் இராமநாதர் என்ற பெயர் வந்தது. இந்த இலிங்கம் அளவில் சிறியது. இந்தக் கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சிறப்புக் கொண்டது.



கிழக்குக் கோபுரம் 126 அடி உயரமும் 9 நிலைகளும் கொண்டது. மேற்குக் கோபுரம் 76 அடி உயரமும் 5 நிலைகளும் கொண்டது. சுதை வடிவில் 12 அடி நீளமும் 9 அடி உயரமும் உள்ள நந்தியைக் காணலாம்.


இராமநாதருக்கு வலது பக்கத்தில் உட் பிரகாரத்திலுள்ள நவசக்தி மண்டபத்தில் அம்பாள் பர்வதவர்த்தினியாக அருள் பாலிக்கிறார்.

**ஜோதி லிங்கம்:**
ஜோதிலிங்கம் அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ளது. இது விபீஷணனால் தாபிக்கப்பட்டது. தன் அண்ணன் முதலியோர் இறந்ததற்குத் தானே காரணம் எனக்கருதி சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்தான். இதன் பலனாக பல வரங்களைப் பெற்று தனது லிங்கத்தில் சிவன் தங்கவேண்டுமென வேண்டினான். இதனாற் சிவன் ஜோதியாய் மாறி இந்த லிங்கத்தில் ஐக்கியமாகி ஜோதிலிங்கம் ஆனார்.

இராமேஸ்வரம் ஆலயத்தில் பரிவர்த்தன மூர்த்திகளாக விநாயகர், காசி விஸ்வநாதர், பள்ளிகொண்ட பெருமாள், சேதுமாதவர், ஜோதிலிங்கம், சப்த கன்னிகள், சபாபதி, சுப்பிரமணியர், இராமர், இலக்குமணர், சீதை, அநுமான், சுக்கிரீவர், விபீடணன் உள்ளனர்.

இங்குள்ள தீர்த்தங்களில் மருந்துத்தன்மை இருப்பதால் நோய்நொடிகள் தீரும். ஒவ்வொரு தீர்த்தத்துக்கும் வெவ்வேறு பெயரும் பலனும் உண்டு. முக்கியமானவை பிரம்மகத்தி நிவர்த்தி தீர்த்தம், கோடி தீர்த்தம், சர்வ தீர்த்தம் என்பவை ஆகும்.

**மூன்றாம் பிரகாரம்:**
உலகப் பிரசித்தி பெற்றது. எப்போதும் திறந்நிருக்கும். இந்தியாவிலேயே, ஏன் உலகிலேயே இதுதான் நீண்ட பிரகாரமாகும். சுற்றளவு 4000 அடியாகும். இருபுறமும் மிகமிக நேர்த்தியாக, ஒழுங்காக வியக்கும் வண்ணம் கல் தூண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை 22அடி 7.5 அங்குலம் உயரமானவை. கருங்கல்லால் உண்டான அச்சடித்ததுபோல் இம்மியும் பிசகாமல் இருப்பது அதிசயத்திலும் அதிசயம். மொத்தம் 1212 தூண்கள். 5அடி உயரமுள்ள திண்ணையை இருபுறமும் காணலாம். அதில் இருந்தும் இளைப்பாறலாம்.



**கோமாதா பூசை:**
மிகச்சிறப்பான பூசையாகும். இந்தியாவிலே இதுதான் விசேஷமானது. அதிகாலையில்தான் நடக்கும். நாங்கள் தரிசிக்கச் சென்றோம். பூசை முடிந்துவிட்டது. என்றாலும் கோமாதா அங்கே நின்றது. தொட்டுத் தடவி வணங்கினோம். அப்போது கட்டணம் இன்றிப் பார்த்தோம். தற்போது 1500 ரூபா சீட்டு வாங்கியே பார்க்கலாம்.

**இராமபாதம்:**
ஆலயத்துக்கு வடக்கே சுமார் 2 கிமீ தூரத்தில் உள்ளது. மணல்மேட்டின்மீது சிறு கோயிலாக உள்ளது. படிகள் ஏறிச் செல்லவேண்டும். இரு பாதங்கள் தெரிகின்றன. பூக்களால் அர்ச்சிக்கப் பட்டிருந்தன. அநுமன் இங்கிருந்துதான் கடலைத் தாண்டி இலங்கையை அடைந்ததாகக் கூறுகின்றனர்.

**கோதண்டராமர் தரிசனம்:**
இது இராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடி செல்லும் பாதையில் 7கிமீ தொலைவில் உள்ளது. இங்குதான் இலக்குமணன் விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்தார். கோதண்டம் - என்றால் வில். வில்லேந்திய இராமர் இங்கே எழுந்தருளியுள்ளார். சீதா, லட்சுமணன், ஆஞ்சநேயர், விபீஷணர், கருடாழ்வார் ஆகியோரையும் தரிசித்தோம்.

**பாம்பன் சுவாமிகள்:**
பிறப்பிடம் பாம்பன் பாலத்துக்கு சமீபத்தில் உள்ளது. அவரின் பெயருள்ள சிறுபிள்ளை களின் பாடசாலை சென்று விவரங்கள் அறிந்தோம்.

**பிரப்பன் வலசை முருகன்:**
பாம்பன் சுவாமிகள் 35 நாள்கள் ஒரு கிடங்கில் இருந்து சமாதியாக இருக்க முருகன் தரிசனம் கொடுத்த இடம். ஒரு தூர்ந்துபோன கிடங்கை அதுவாகக் கண்டோம். மாந்தோப்பில் அமைந்த சிறு கோயில்தான். தனி முருகனைக் காணலாம்.

**தேவிபட்டணம் - நவக்கிரக வழிபாடு:**
கடலுக்குள் நவக்கிரக வழிபாடு. போரில் வெற்றிபெற, தோஷங்கள் நீங்க இராமர் இங்கே வழிபாடு செய்தாராம். தோணியிற் சென்று கடலில் இருக்கும் கிரகங்களைத் தரிசிக்கவேண்டும். தோணியில் கால் மைல் அளவு தூரம் சென்று இறங்கி அறுகம்புல் எடுத்தேன். ஐயரும் எம்மோடு தோணியில் வந்தார். பின்னர் நவக்கிரகங்கள் இருக்கும் இடம் சென்றோம். சனி, ராகு, கேது, புதன், தண்ணீரின் மேலே தெரிந்தன. இவற்றை ஐயர்தான் காட்டினார். அறுகம்புல் வைத்து, தொட்டுத்தடவி பூசைசெய்தேன். தண்ணீருக் கடியில் வியாழன், சுக்கிரன், சந்திரன், சூரியன் இருந்தன. இவற்றைத் தொட்டுக்காட்ட வணங்கினேன். இதன்பிறகு அருகிலிருந்த கோயிலில் சாந்தி செய்தோம்.

22 09 2016 இல் நான்காவது தடவையாக, 13 வருடங்கள் கழித்து எதிர்பாராத விதமாக இராமேஸ்வரம் செல்ல நேர்ந்தது. நாங்கள் மதுரையை நோக்கி காரில் சென்றோம். தினத்தந்தி பத்தரிகையை வாசிக்கும்போது, தற்போது மாளய காலம் என்றும், பிதுர்களுக்கு சிரார்த்தம் செய்யத் தகுந்த நாள் என்றும் இருந்தது. மேலும் இதற்கு கடற்கரை சார்ந்த கோயில்தான் விசேஷம் எனவும் இருந்தது. இதனால் மதுரைக்குச் செல்லாமல் இராமேஸ்வரம் சென்றோம்.

கடற்கரைகளில் அமைந்துள்ள ஆலயங்களில் negative ions என்ற சக்தி அதிகம் கிடைக் கிறதுஎன்று ஆய்வுசெய்து கண்டுபிடித்தனர். பிராணவாயு இரத்தத்தில் (Haemoglobin) கலப்பதற்கு இவை உதவுகின்றன. மாலைப்பெ-ாழுதிற் சென்றோம். கோபுரம், மதில்கள் யாவும்

சமீபத்தில் நடந்த கும்பாபிஷேகத்தால் மிக அழகாகத் தோன்றின. முதலில் மஞ்சள், வானளந்த, கோபுரங்கள், பின்னால் அழகிய மரங்கள், அதன் சுற்றாடலில் பெருந்தொகையான வடநாட்டு மக்கள், குறைவான பிச்சைக்காரர்கள். என்னே மாற்றம். இந்தியா முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதற்கு இவை சாட்சிகள்.

1500 ரூபா கொடுத்துச் சிரார்த்தம் செய்தோம். முடிவில் சிரார்த்தம் செய்த பொருள்களை கடலில் இட்டோம். இரவு அர்த்தசாமப்பூசை. இதில் அநேகர் வடஇந்தியப் பெண்மணிகள். யாவரும் சேர்ந்து தமது மொழியில் ஒன்றாகவே பத்தியோடு பாசுரங்கள் பாடியமை எம்மைப் பரவசமாக்கியது.

மறுநாள் அதிகாலையில் சென்று வரிசையில் நின்று சீட்டெடுத்து ஸ்படிகலிங்க தரிசனம் செய்தோம். நிறைந்த மக்கள் கூட்டம். வரிசையாக நின்று தரிசித்தோம்.

**அப்துல் கலாம் சமாதி:**

தாவர உணவையே உண்டு, பாரத நாட்டில், பாராளுமன்றில் தலைமை உரையாற்றும்போது தமிழில் தாம் இயற்றிய கவிதையைப் பாடி தமிழ் அன்னைக்கு, ஏன் தமிழினம், தமிழ் நாட்டுக்கே ஒரு தனியிடம் தேடியவர். எமது புராணங்கள், இதிகாசங்கள், ஆன்மிக நூல்கள் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், திருக்குறள், பாரதி பாட்டுக்கள் யாவும் அறக் கற்றவர்; அதன்படியே ஒழுகியவர். இந்திய பெரிய விஞ்ஞானிகளில் ஈடு இணை அற்றவர்.

இவரின் சமாதி இராமேஸ்வரம் கோயிலுக்குச் செல்லுமுன்னரே காணலாம். கார்ச்சாரதி அப்துல்கலாம் சமாதி என்றவுடனே, காரை நிறுத்தச்சொன்னேன்.

பரந்தவெளியில் அவரைப்போன்று எளிமையாக உள்ளது. முதல் அவரின் உருவச்சிலை பொன்னிறமாக ஒரு மேடையில் நின்றபடி இருப்பதைக் காணலாம். இதைத் திறந்தது ஜெயலலிதா அம்மையார் என்றும் இருந்தது. சற்று உள்ளே சென்றதும் சமாதி மண்மேட்டில் துணியால் மூடியபடி இருந்தது. தலைமாட்டில் மாலை போட்டிருந்தது. நாற்புறமும் பார்க்கக் கூடியதாக அடைப்பு இருந்தது. ஒரு மூலையில் தேசியக் கொடியைக் காணலாம்.

இராமேஸ்வரக் கோயிலின் பிரதம குருக்களின் மகன் இவரின் பால்ய சிநேகிதன். இக்கோயிலில் விசேஷ பூசை பிரசாதத்தை செய்து அவரின் அழைப்பின்பேரில் சென்று குடியரசுத்தலைவராக வந்தபோது கொடுத்தார். இராமேசுவரத்திலேயே பிறந்து வளர்ந்து படித்து இராமேஸ்வரத்துக்குப் பெருமை சேர்த்தவர் அப்துல் கலாம்.

மாணவர்தான் நாட்டின் வருங்காலச் சொத்து என்று கருதியவர் கலாம். மாணவரோடு அன்பாகப் பழகினார். 2015ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் திகதி மாணவர் முன் உரையாற்றும்போதே அவரின் உயிர் பிரிந்தது.

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்**

இராமேஸ்வரம் கோயில் மிகப் புனிதமானது. விசேடமும் அற்புதங்களும் கொண்டது. கோயில் முழுவதையும் தரிசித்து அநுபவிக்க பல முறை சென்றாலும் முழுமையாக இயலாது.

**இராமேஸ்வரம் - காசி புனிதயாத்திரை**

இராமேசுவரத்தில் அக்கினி தீர்த்தத்தில் மணல் எடுத்து, காசியில் கங்கையில் அதைக் கரைத்துவிட்டு, காசி அலகாபாத் திரிவேணி சங்கமத்தில் தீர்த்தம் எடுத்து, திரும்பிவந்து இராமேஸ்வரத்தில் இராமநாதருக்கும் காசி விஸ்வநாதருக்கும் அபிஷேகம் செய்து இந்த யாத்திரையை நிறைவு செய்யச் சாதுக்களுக்கு அன்னதானம் செய்வர். அப்போதுதான் யாத்திரையின் பலன் கிடைக்கும் என்பர்.

முன்னர் எழுதியதுபோல இராமேஸ்வரத்தில் 22 தீர்த்தங்கள் உள்ளன. இதில் கடைசியாக உள்ள தீர்த்தம் கோடி தீர்த்தம் எனப்படும். விசாலாட்சி அம்பாள் சந்நிதிக்கு அருகில் உள்ளது. இராமர் வில்லூன்றி நீரெடுத்து அபிஷேகம் செய்ததால் புனிதமடைந்த தீர்த்தம் என்பர். தெற்கில் உள்ளோர் இந்தத் தீர்த்தத்தை எடுத்து காசிக்குக் கொண்டு செல்வதும் வடக்கிலுள்ளோர் கங்கை நீரை இராமேஸ்வரம் கொண்டு வருவதும் வழமை.

# அம்பாளே நேரில் வந்தாள்........

காஞ்சிமடத்தில் ஒரு நாள் சந்திரமௌலீசுவரர் ஆராதனைக்குப்பின் ஒரு சிறிய காமாட்சி அம்பாள் விக்கிரகத்தை வைத்துப் பூசை செய்துகொண்டிருந்தார் காஞ்சிப்பெரியவர். அப்பொழுது அங்கே ஒரு பெண் வேகமாக வந்து உள்ளே நுழைந்து, "எனக்கு உடனடியாக ஒரு புடைவை குடு" என்று பெரியவரைப் பார்த்து ஏக வசனத்தில் சத்தமாகக் கேட்டார்.

பூசை நடைபெறும்போது குறுக்கே பேசுவதே தவறு. சத்தம் போட்டுப் பேசுவது அதை விடத் தவறு. இவை அனைத்தையும்விட, பெரியவரை "குடு" என்று மரியாதைக்குறைவாகப் பேசியது அங்கிருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. என்ன நடக்கப்போகிறது என அங்கிருந்தோர் ஆவலில் அமர்ந்திருந்தனர்.

பூசை செய்துகொண்டிருந்த பெரியவர் பூசையை நிறுத்திவிட்டு, வந்துநின்ற பெண்ணைத் திரும்பிப் பார்த்தார். "என்ன பார்க்கறே... முதல்ல எனக்குப் புடைவை குடு" என்று சத்தமிட்டபடி தன் முழங்காலில் புடைவை கிழிந்திருந்ததைக் காண்பித்து "பார், எப்படிக் கிழிஞ்சிருக்கு" என்றார் அந்தப்பெண்.

மடத்துச் சிப்பந்திகள் பெரியவரின் பூசையைக் குழப்பிய அந்தப் பெண்ணை வெளியே போகும்படி விரட்ட ஆரம்பித்தனர். கையைக் காட்டி அவர்களைத் தடுத்தார் பெரியவர். பின்னர் அங்கிருந்த பழத்தட்டு ஒன்றைத் தன்னருகே இழுத்து ஒரு புடைவையை எடுத்துவரச்சொல்லி, அதை அந்தத் தட்டிலே வைத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தார். புடைவையை மட்டும் எடுத்துக்கொண்ட அந்தப் பெண் வந்த வேகத்திலேயே மடத்தைவிட்டு வெளியேறினார். பெரியவர் தன் பூசையைத் தொடர்ந்தார்.

அந்தப் பெரிய கூட்டத்தில் ஒருவருக்குமட்டும் சந்தேகம் வந்தது. சில தினங்களுக்கு முன்னர்தான் ஒரு தாயார் சித்தப்பிரமை பிடித்த தன் மகளுடன் வந்து, மகளைக் குணமாக்கிச் சென்றார். இந்தப் பெண்ணும் ஏதாவது சித்தப்பிரமை பிடித்தவளோ? புடைவையை என்ன செய்வாள்? அவர் எழுந்து அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்தார். சிறிது தூரம் போனவர் திடுக்குற்று நின்றார். காரணம்... அவரின் கன்னத்தில் யாரோ பளார் என்று அறைந்ததுபோல அவர் உணர்ந்தார். கன்னம் சிவக்கத் தன்னை அறைந்தது யார் என்று தெரியாமல் மயங்கி விழுந்தார். பின் நிலை தெளிந்து மடத்துக்குத் திரும்பி வந்தார்.

அப்போது பூசையைப் பெரியவர் முடித்து, வந்த அந்தச் சீடனைப் பார்த்தார். "என்ன! புடைவையை வாங்கிண்டு போனவ என்ன செய்யறான்னு என்று பார்க்கப் போனியா? அவ சித்தப்பிரமை பிடிச்சவன்னு நினைச்சியாக்கும். அவ யார் தெரியுமா? அம்பாள்டா! அந்தமட்டும் ஒரே அறையோட நிறுத்தினாளேன்னு சந்தோஷப்பட்டுக்கோ" என்று சொன்னவர் தான் பூசை செய்துகொண்டிருந்த காமாட்சி விக்கிரகத்தைக் காட்டினார். **அந்தப் பெண் காட்டியதுபோலவே, உடுத்தியிருந்த புடைவை விக்கிரகத்தின் முழங்காலடியில் கிழிந்திருந்தது.**

**தகவல்: அநுராதா** **நன்றி: குமுதம் லை.்.ப்**

# இந்திரன் பழிதீர்த்த படலம்

முற்காலத்தில் கிரேதாயுகத்தில் சுவர்க்க லோகத்தின்கண் தேவேந்திரன் இனிய ஆடலைக் கண்டும் பாடலைக் கேட்டும் பெண்களின் மையலில் மூழ்கிக் கிடந்தான். அந்த மயக்கத்தால் அவன் அப்போது அங்கு வந்த தேவகுருவாகிய வியாழ பகவானையும் வழிபடாமல் அவமதித்தான். குருவை அவமதித்த குற்றத்தால் இந்திரனின் செல்வம் குன்றியது. நாட்டில் பஞ்சம் பரவியது. குருவும் திரும்பிச் சென்றுவிட்டார்.

இந்திரன் தன் குருவைத் தேடிக் காணாமல் பிரம்மதேவரிடம் முறையிட்டான். பிரம்மதேவர் அசுரகுல குருவாகிய துவட்டாவின் மகன் விசுவரூபன் என்பவனைக் குருவாகக் கொள்ளுமாறு கட்டளையிட்டார். இந்திரன் அவ்வாறே குருவைக் கொண்டு, தன்பொருட்டு ஒரு யாகம் செய்யுமாறு அக்குருவை வேண்டினான். விசுவரூபன் அதற்கு உடன்பட்டு வாக்கால், “தேவர்களுக்கு ஆக்கம் பெருக” என்று கூறி, மனத்தினால். “அசுரர்களுக்கு ஆக்கம் உண்டாகுக, தேவர்கள் துன்பம் அடைக” என யாகம் செய்தான். அதனை ஞானதிருஷ்டியால் அறிந்த இந்திரன் தன் வச்சிரப்படையால் அவனுடைய மூன்று தலைகளையும் வெட்டினான். அவை மூன்றும் காடையும், ஊர்க்குருவியும், சிச்சிலியுமாகப் பறந்தன. அதனால் இந்திரனைப் பிரமக் கொலைப் பாவம் பற்றிக்கொண்டது. தேவர்கள் அதனைத் தீர்க்க விரும்பி மரம், மண், தண்ணீர் பெண்கள் முதலியவர்களுக்கு அப்பாவத்தைப் பகுந்தளித்ததனால், இந்திரன் சுத்தம் அடைந்து விளங்கினான்.

தேவேந்திரன், தன் மகனாகிய விசுவரூபனைக் கொன்ற செய்தி கேட்டு துவட்டா ஆற்ற முடியாத சீற்றம் கொண்டான். அவன் ஒரு வேள்வி செய்து விருத்திராசுரன் என்னும் இரக்கமில்லாத அரக்கனைப் படைத்தான். தருமஞ் செய்தோர் பலம் நாள்தோறும் வளருவதைப்போல, விருத்தியாசுரன் பருத்துக் கொழுத்து வளர்ந்து வந்தான். துவட்டா அவனைப் பார்த்து “ தேவலோகத்தின் தலைவனான இந்திரனைக் கொன்று வருக” என ஆணையிட்டான். தேவேந்திரன் அவனுடன் சண்டையிட்டு தோல்வியைத் தழுவிக் கொண்டான். தேவேந்திரன், தனக்கு ததீச முனிவர் தந்த முதுகெலும்பினால் புதியதொரு வச்சிராதாயுதம் செய்து, விருத்திராசுரனுடன் போரிட ஆயத்தமானான். இதையறிந்த விருத்திராசுரனோ பயந்துபோய் நடுக்கடலில் தவம் செய்யும் முனிவர்கள் இடையே ஒளித்திருந்தான். இந்திரன் அவன் நடுக்கடலில் ஒளிந்திருப்பதை அறிந்து, அகத்திய மாமுனிவரை வேண்டிக் கடலின் முழுநீரையும் குடித்து கடல் நீர் வற்றுமாறு செய்தான். அதன்பின், விருத்தராசுரனின் தலையை வெட்டி எறிந்தான். விருத்திராசுரனுடைய தலையை வெட்டியதால் பீறின இரத்தத்தால் வற்றிய கடலும் நிரம்பிற்று. மீண்டும் கொலை செய்ததனால், தேவேந்திரனை பிரமகத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. பின்பு இந்திரன் வியாழபகவானின் ஆலோசனையின் பிரகாரம் பூலோகத்தில் தலயாத்திரை செய்து, திருக்கேதாரம், காசி, காஞ்சி முதலிய சில தலங்களையும் தரிசித்து கடம்பவனம் அடைந்தான். அங்கு ஒரு விமானத்தை அமைத்து, சோமசுந்தரக்கடவுளைத் தியானித்து, ஆனந்தம் பெருகி கண்ணீர் வழிந்தோட பலமுறை கைகூப்பி,

“ அங்கணா போற்றி! வாய்மை
ஆரணா போற்றி! நாக
கங்கணா போற்றி! மூல காரணா போற்றி! நெற்றிச்
செங்கணா போற்றி! ஆதி சிவபரஞ் சுடரே போற்றி!
எங்கணா யகனே போற்றி! ஈறிலா முதலே போற்றி!
யாவையும் படைப்பாய் போற்றி! யாவையும் துடைப்பாய் போற்றி!

யாவையும் ஆனாய் போற்றி! யாவையும் அல்லாய் போற்றி!
யாவையும் அறிந்தாய் போற்றி! யாவையும் மறந்தாய் போற்றி,
யாவையும் புணர்ந்தாய் போற்றி! யாவையும் பிரிந்தாய் போற்றி!"

என்றவாறு பலவிதமாய்ச் சோமசுந்தரக்கடவுளைத் துதித்து, தனக்கு நேர்ந்த பிரமகத்தி தோஷத்தை நீக்குமாறு வேண்டி, கொலைப்பழியும், தீவினைகளும் நீங்கப்பெற்றுத் தேவ லோகத்தை அடைந்தான். அங்கு மீண்டும் இந்திராணியுடன் தனது சொர்க்கலோகத்தில் ஆட்சிபுரிந்து வந்தான்.

# இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில்

## புனராவர்த்தன ஜீர்ணோத்தாரன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

**நாள்:** ஏவிளம்பி வருடம், ஆனி மாதம் 19ஆம் நாள்
03.07.2017 திங்கட்கிழமை
**நேரம்:** காலை 9.30 மணிமுதல் 11.00 மணிவரை

### கிரியைகள்:

25.06.2017 - ஞாயிற்றுக்கிழமை அநுக்ஞை, விக்னேஸ்வர பூஜை
30.06.2017 - வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக யாக ஆரம்பம்

### எண்ணெய்க் காப்பு:

01.07.2017 - சனிக்கிழமை காலை 5மணிமுதல் இரவு 10மணிவரை
02.07.2017 - ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிமுதல் மாலை 7மணிவரை

### மஹாகும்பாபிஷேகம்:

03.07.2017 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலில், மேலே குறிப்பிட்டுள்ள தினத்தில், நடைபெற இருக்கும் குடமுழுக்கு விழா நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கோயில்கள் திருத்த வேலைகள் செய்யப்பெற்றுக் குடமுழுக்கு நடைபெறுவது ஆகம விதியாகும். அதன்படி இந்த விழா நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர் கலசம்

# வெளிச்சத்துக்கு வரும் சித்தர்கள்

திருமதி அன்னலட்சுமி முருகமூர்த்தி

சித்தர் மகான்கள் கோயில்களை அண்டியும், மலை அடிவாரங்களிலும் தியானத்தில் ஈடுபட்டு, இறைவனிடமிருந்து திருவருள் பெறு கின்றார்கள். சித்தர்கள் கூடுதலாகத் தமிழ்நாட்டிலுள்ள திருவண்ணாமலைத் தலத்தில் இருப்பதாகச் சான்றுகள் கிடைத்துள்ளன.

சித்தர்கள் சிவசமாதி அடைந்திருந்தால் அச்சூழல்களில், அதிர்வு அலைகளும், அருள் அலைகளும் வந்து குவிகின்றன. கொல்லி மலையிலும் இப்படியான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன; நடைபெறுகின்றன. திருவண்ணாமலையில் கிரிவலம் வருவது மிகவும் பிரசித்தமானது. பொதுவாக, பதினெண் சித்தர்கள் முக்கியம் வாய்ந்தவர்கள் என்ற கருத்தும் உண்டு.

திருவண்ணாமலைச் சித்தர்களில் இசக்கி சுவாமிகள் முக்கியம் வாய்ந்தவர் என அறியப்படுகின்றது. இவர் 108 தடவைகள் மலையைச் சுற்றி உருண்டு பிரதட்சணம் செய்துள்ளார். இசக்கி சுவாமிகள் தனது பெற்றோருடன் 1930ஆம் ஆண்டு கார்த்திகைத் தீபம் பார்க்கச் சென்றார். அப்பொழுது அவருக்கு வயது 13. மீண்டும் 1959ஆம் ஆண்டு அங்கு சென்றார். அந்த முறை ஊருக்குத் திரும்பி வரவில்லை. 1981ஆம் ஆண்டு திருவண்ணாமலை அடிவாரத்தில் தன் உடலில் காற்றை வெளியே விட்டு இறைவ னுடன் கலந்து விட்டார்.

பிறவிப் பெருங்கடல் நீந்திக் கரைசேர வேண்டுமானால், அறியாமை இருளை நீக்கி ஞானம் பெறவேண்டும். ஞானத்தைப் பெற ஒரே வழி தகுந்த குருவை அணுகுதல் ஆகும்.

குருலிங்க சுவாமிகள் என்னும் சித்தர் பிறந்த ஊரைவிட்டு வெளியேறி, பல சிவத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு இறுதியாக காசிக்குச் சென்றார். பல ஆண்டுகள் காசியில் தியானத்தில் ஈடுபட்டு இருந்தார். ஏராளமான பக்தர்களுக்கு ஆன்மிகக் குருவாக இருந்துள்ளார் என 12-06-1916இல் வெளியான ஒரு சஞ்சிகையில் வாசித்தறிந்துகொண்டேன். இறுதியாக, திருவண்ணாமலைக்குச் சென்று ஒரு குகையில் நிஷ்டையில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. சித்தர்கள் சமாதியடைந்த இடங்களில் புகழ்பெற்ற கோயில்கள் இருப்பதாக அறிய முடிகின்றது.

இன்னொரு சித்தர்மட்டும் சிவசமாதியில் ஒடுங்காமல் தமிழ்நாடு முழுவதும் சென்று அருள்பாலிப்பதாகத் தகுந்த ஆதாரங்களுடன் கூறப்பட்டுள்ளது. ஆய்வு நூலின்படி நந்தி தேவர் முதலாவது சித்தர் என்ற கருத்தும் உண்டு. தேவமுதன்மையான சித்தர்கள் பதினெண்மர். அகத்தியர் முனிவர் முதன்மை யானவர் என்றும் கூறப்படுகின்றது. இவர் அகத்தியம் என்னும் இலக்கண நூலை இயற்றினார். தொல்காப்பியத்துக்கு முற்பட்ட நூல் இது. ஆனால் அந்தஸ்துக் கிடைக்காமல் போய்விட்டது. பதினெண் சித்தர்களும் கடும் தவம் புரிந்து இறைவனிடம் வரம் பெற்று ஒன்பது கிரகங்களையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இயற்கையைச் சரிசெய்யும் ஆற்றலைப் பெற்றிருந்தனர்.

பதினெண்சித்தர்கள் வரிசையில் காலத்தால் மிகவும் முற்பட்டவர் திருமூலர். அவர். கிறிஸ்துவுக்குப் பின் 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருமூலர் திருக்கயிலையில் நந்திதேவரிடம் மெய்ப்பொருளைக் கற்றறிந்தார் தமிழகத்தின் பெருமைகளை அறியும் பொருட்டு அகத்திய முனிவரைச் சந்திப்பதற்கு பொதிகை மலையை வந்தடைந்தார். மூலன் என்னும் இடையனின் உடலினுள், கூடு விட்டுக் கூடு

பாயும் முறையால் அடைந்தது உங்களுக்குத் தெரியும். பின்னர் திருவாவடுதுறையை அடைந்து அரசமர நிழலின் கீழ் அமர்ந்து சிவயோகத்தில் ஈடுபட்டு, மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை இயற்றினார். இறுதியில், திருக்கயிலாயம் சென்று சிவகதி அடைந்தார் எனப் பெரியபுராண வரலாறு கூறுகின்றது.

இறுதியாக, செல்லப்பா சுவாமிகளைக் குருவாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் அவதரித்த யோகர் சுவாமிகளின் ஆன்மிக சக்தியை ஈழத்தமிழர்கள் என்றென்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். இவர் பதினெண் சித்தர்களுக்கு அடுத்தவராகக் கணிக்கப்படுகின்றார். அக்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்த தமிழ் அறிஞர்கள் பலர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்கு யோகர் சுவாமிகளைச் தரிசித்து ஆசிகள் பெற்றுச் சென்றுள்ளார்கள். காலஞ்சென்ற தமிழ் அறிஞர் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, தெ.பொ.மீனாட்சிசுந்தரம்பிள்ளை போன்ற அறிஞர்களைக் குறிப்பிடலாம்.

யோகர் சுவாமிகள் சித்துக்கள் புரிவதை விரும்பவில்லை. தனது ஞானக்கண்ணால் தன்னைச் சந்தித்துப் போனவர்களின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து ஆவன செய்தார். அவர் பொதுவாகக் கூறும் மகா வாக்கியங்கள் -

"சும்மா இரு"
"முற்றும் உண்மை"
"ஒரு பொல்லாப்புமில்லை" என்பன.

**உகந்து மனங்குவிந்து ஒன்றுக்கு மஞ்சாது**
**அகந்தைஅவா வெகுளி யகற்றிச் - சகந்தனிலே**
**தாமரையிற் தண்ணீர்போற் சாராமற் சார்ந்து**
**சேமமொடு வாழ்வாய் தெளிந்து"**

-

**- யோகர் சுவாமிகள்**

# Worship & Meditation

**Our temples are not intended for silent prayers as done in Churches, Mosques, or Buddhist Vihaaraas. Individual meditation is very important for us. Temples do not exist for meditation or congregational prayers. We build palaces, decorate them and provide the necessary paraphernalia to our Kings who protect and rule over us. We pay him taxes too. Similarly Bhagawan is the Universal King and Protector. We offer Him Gold and other offerings and celebrate the festivals with lot of pomp and splendor. Worship at our temples is a kind of community thanksgiving and collective offering. There can be no quietness at our temples. There will be sound, music, bells and an atmosphere of bustle and activity. Meditation is earmarked for Pooja rooms at homes, river banks, and temple tanks. This does not mean that there is a license for meaningless chatter and noise at temples. I only referred to those sounds sanctioned by our sastras like the tolling of bells, performance of musical instruments, chanting of Vedas, Devaram and bursting of crackers during processions. These traditional sounds themselves have a strange power to draw one towards silent meditation. Even in the midst of these sounds, if one closes one's eyes in prayer before the sanctum sanctorum or sit in front of Dakshina moorthy to silently chant His name, a feeling of oneness quickly occurs.**

**– Jagadguru Sri Chandrasekharendra Saraswathi Swamigal**

**Courtesy: Theyvatin Kural** **Provider: London Sabari**

# தித்திக்கும் திருமந்திரம்

## சுகந்தி இந்துசேகரன்

ஆனந்தக்கூத்தாடும் அம்பலத்தான் திருவருட்துணை கொண்டு அடியார்கள் திருவாய்மலர்ந்தருளிய நூல்கள் திருமுறைகளாகும். இவை பன்னிரண்டாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் இறைவனின் புகழைப் போற்றிப்பாடும் தோத்திர நூல்கள். இங்கு, ஞானநூல்களின் பிழிவு திருமுறைகள் என்று கூறுவது சாலப் பொருந்தும். இவற்றுள் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் விளங்குவது திருமந்திரம். இறை அன்பின் வெளிப்பாடு தோத்திரமாகும்; இறை ஞானத்தின் வெளிப்பாடு சாத்திரமாகும். இறையன்பினதும், இறைஞானத்தினதும் கூட்டு வெளிப்பாடு திருமந்திரம். எனவே திருமந்திரம் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் பார்க்கப்படுகிறது. இது இறைவனின் புகழைப் பாடுவதோடு மட்டுமன்றி, இறைவனை அடைவதற்குரிய நெறிகளையும், சைவ சமயத்தின் உட்கிடக்கையாக விளங்கும் சாத்திரக் கருத்துக்களையும் தன்னுள் அடக்கிய சைவசமயத்தவர்களின் பொக்கிஷமாகும்.

இறைவனைப் பாமாலையாகப் பாடிப்புகழ்வது மூவர் திருமுறைகள். இறை அநுபவத்தின் பிழிவு திருவாசகம். தத்துவரீதியாக இறைவனை உணர வைப்பது சைவ சித்தாந்தம். இவ்வாறாக எமது மனத்திலே இறை உணர்வைத் தூண்டி, இறைவனை உணர வைக்கும் மந்திரமாக உள்ளது திருமந்திரம். மனதிலே இறை சிந்தனையை எழுப்பி, எம்மை இயக்குகின்ற சக்தியாக அது உள்ளது. இந்த உலகத்தோர் உய்வதற்காக இறைவன் திருவருள் பூண்டு அருளியது திருமந்திரம். இது தமிழில் வேதத்தை எடுத்துக் கூறிய முதல் நூல் என்பதனால் “தமிழ் வேதம்” என்று கூறப்படுகிறது.

மனித நேயம் இருப்பவனால்தான் இறைவனை உணர முடியும். மானுடப்பிறப்பு இறைவன் எமக்கு அளித்த ஒரு நன்கொடை. இறைவன் தன்னை உணர்வதற்காக உலகம், உடல், உயிர் களைப் படைத்துள்ளான். உறவுகள் மூலம் பாசத்தைப் பயன்படுத்தி நம்மை இயக்குகின்றான். நாம் எமது வினைப்பயன் காரணமாக நல்வினை, தீவினைகளை அநுபவித்துக் கொண்டிருக்கி றோம். இவற்றை எல்லாம் கடந்து மாயையில் இருந்து விடுபட்டு இறையருளை நமக்குள் எப்படிக் கொண்டு வருவது என்பது பற்றி திருமந்திரம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.
தமிழ் மக்களின் வாழ்வியலைப் பொருள் இலக்கணமாக அமைத்துத் தந்த தொல்காப்பியத்தில் மந்திரம் என்பதற்குரிய பொருளைப் பின்வருமாறு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

**நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப**

அதாவது எல்லாவற்றிற்கும் மூலப் பொருளாகிய இறைவன், மனிதருள் தகுதி வாய்ந்தோரின் ஆணைப்பாட்டினால் வெளிப்படுத்திய மறை மொழிகளே மந்திரமாமென மந்திரத்திற்கு விளக்கம் தருகிறார் தொல்காப்பியர்.

திருமந்திரம் =திரு+மந்திரம். இங்கு திரு என்பது - இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகப் பார்ப்பது என்று பொருள்படும். மந்திரம் என்றால் - மேலே குறிப்பிட்டவாறு “மறைமொழி” என்று பொருள்படும். எனவே இம்மையையும், மறுமையையும் சமமாகப் பார்க்கக்கூடிய தன்மையை உணர்த்துகிற “மந்திர மொழியே” திருமந்திரம் என்று கூறினால் மிகையாகாது.
திருமூலர் இவ்வுலகத்தோர் ஓதிப் பிறவாப் பெரு நெறியை அடைவதற்காக அருளிய பாடல்கள்

3000. அவை 300 மந்திரங்களென வகைப்படுத்தப்பட்டு 30 எனத் தொகைப் படுத்தப்பட்டுள்ளன என்பது வரலாறு. சொல்லின் அதிர்வையே இங்கு திருமூலர் மந்திரம் என்று குறிப்பிடுகின்றார். இத் திருமந்திரப் பாடல்களை மீண்டும் மீண்டும் நாம் ஓதுவதனால், இவற்றைத் தான் அருளிய "தமிழ் மந்திரங்கள்" எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இவற்றுள் ஒருசில பாடல்களை இப்போது பார்ப்போம்.

**பின்னை நின்றென்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே**

பிறவி துன்பம் தருவது. இருந்தும் மீண்டும் மீண்டும் பிறக்கின்றோம். மீண்டும் மீண்டும் பிறப்பவர்கள் முற்பிறப்பில் தவம் செய்யாதவர்கள். ஆனால் நான் பிறந்துவிட்டேன்; இல்லை; நான் பிறக்கவில்லை. இறைவனால் படைக்கப்பட்டுள்ளேன். ஏனெனில், தன்னை நன்றாகத் தமிழ் ஆகமம் செய்வதற்காகவே என்று தன்னைத் தானே உணர்ந்து கொண்ட திருமூலர் இறைவனின் பேரன்பில் அமிழ்ந்து வாழ்வதே சிறந்த வாழ்வென இப்பாடல் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.
த்+ அமிழ் = தமிழ்
த் என்பது - எல்லாவற்றுக்கும் அவனே முதன்மையானவன் என்று பொருள்படும்.
அமிழ் - இறைவனுள் அமிழ்ந்து வாழ்தல். எனவே எல்லாவற்றுக்கும் முதன்மையான பரம்பொருளில் அமிழ்ந்து வாழ்தலே சிறந்த தமிழ் வாழ்வு எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.
மக்கள் எப்படியான ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் உலகில் அறச் செயல்கள் நிலைத்து நிற்கும் என்பதனைப் பின்வரும் பாடல் மூலம் சுட்டிக்காட்டுகிறார்

**படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயின்**
**நடமாடும் கோயில் நம்பர்க் கிங்குஆகா**
**நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயின்**
**படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே**

இப்பாடலில், சிவனடியார்களை நடமாடும் கோயிலாகவும், இறைவனை நின்ற சிவமாகவும் கண்ட திருமூலரின் எண்ணம் எவ்வளவு உன்னதமானது. இறைவனுக்குக் கொடுப்பது இல்லாதவனுக்குச் சென்றடையாது. ஆனால் இல்லாதவனுக்குக் கொடுத்தால் அது இறைவனைச் சென்றடையும் என்பதை இப்பாடல் மூலம் எவ்வளவு எளிமையாக எடுத்துக் கூறுகிறார்.

அறியாமையாகிய அக இருளைப் போக்கி மக்களை நல்வழிப்படுத்துவதற்காக இறைவன் நம்முள் தோன்றாத் துணையாக நின்று அருள் புரிகிறான். இதை விளக்கும் திருமந்திரப் பாடலாக அமைவது:

**குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்**
**குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி**
**குருடும் குருடும் குழிவீழு மாறே** - என்னும் பாடல்.

வழிபாட்டு முறைகளுள் மிகவும் மேலானது குருதத்துவம். "மானைக்காட்டி மானைப் பிடிப்பர்". அதுபோல இறைவன் மக்களை நல்வழிப்படுத்தி இன்பம் தருவதற்காக குருவடிவில் வந்து அருள் புரிவான். மானுடச் சட்டை தாங்கி வரும் பரம்பொருளாகிய குருவை நாம் மானுடராகக் கருதக் கூடாது. உண்மையான குருவை அடையாளம் கண்டு அவர் வழியில் நிற்க வேண்டும். அதாவது

அறியாமையாகிய இருட்டினை நீக்குவதற்கு உண்மையான குருவை இனம் கண்டு அவர் வழிகாட்டலில் நிற்க வேண்டும் என்று இப்பாடல்வழி கூறுகிறார் திருமூலர்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே**

என்று குருதத்துவத்தின் பெருமையை இப்பாடல் மூலம் விளக்குகிறார்.
இவ்வுலகில் நாம் அனைவரும் வாழ்வாங்கு வாழ்ந்து இறையடி சேர்வதற்கும் சிறந்த வழியையும் காட்டியுள்ளார் திருமூலர்.

“கனி இருப்பக் காய் கவர்ந்தாற் போல” என்பதற்கு இணங்க, எம்மை வருத்தி இறைவனை வணங்க வேண்டிய அவசியம் இல்லை. எளிமையான, அரும் கனி போன்ற இனிய சிவநாமத்தை மனம் உருகி ஓதினால் அதுவே மேலானது என்ற தத்துவத்தை இங்கு காணும் பாடல் மூலம் விளக்குகின்றார் திருமூலர்.

**அரகர என்ன அரியது ஒன்றில்லை**
**அரகர என்ன அறிகிலர் மாந்தர்**
**அரகர என்ன அமரரும் ஆவார்**
**அரகர என்ன அரும்பிறப் பன்றே**

என்று கூறிய திருமூலர், ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டியுள்ளார். மேலும் “சிவசிவ” என்ற சிவநாமத்தை (மந்திரத்தை) ஓதினால் வாழ்வு நலம்பெற்று விண்ணுலக வாழ்வை எய்தலாம் என்பதை

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரும் ஆவார்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே** - என எடுத்துரைக்கின்றார்.

“பொய்காட்டி மெய்யுணர்த்தல்” என்ற வாசகத்திற்கு ஏற்றவாறு, ஆன்மாவானது மெய்ப்பொருளை உணரத் தொடங்கும் போது, பொய்யானவை எல்லாம் தானாகவே விலகிவிடும் என்ற உண்மையை உணர்த்தும் பாடலாக இப்பாடல் அமைகிறது.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே**

ஐம்பூத மயக்கத்தில் அமிழ்ந்திருக்கும் ஆன்மாவானது உயிருக்குள் உயிராய் அருவமாய் இருக்கும் பரம்பொருளை உணர்கின்ற நிலையை அடையும் பொழுது அனைத்துப் போலிகளும் விலகிவிடும் என்பது அப்பாடலின் பொருளாகும்.

எனவே தெய்வீக மணம் கமழும் தித்திக்கும் இத்திருமந்திரப் பாடல்களைப் படித்தும், திருமூலரின் மந்திர மொழிகளைக் கற்றும் தீவினை ஒழித்து இறையருளோடு கூடி இன்புற்று வாழ்வோமாக.

# கலசம் வாசகர் ஒருவரின் கடிதம்

ஆறு மாதங்களுக்கு முன்னர் வந்த கலசம் இதழில், ஆசிரியர், "வீணாக்கலாமா?" என்ற தலைப்பில் வலுவான கருத்தொன்றைத் தலையங்கத்தில் வெளியிட்டிருந்தார். பலரின் உள்ளத்தில் உறுத்திக்கொண்டிருந்த கருத்தை ஆசிரியர் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தது பாராட்டத் தகுந்தது.

கோயிலுக்குச் செல்லும்போது, பூசைப்பொருள்களைக் கொண்டு செல்வது பொருத்தமானதே! அவற்றுள் பூ, பால் இரண்டும் விரைவிலே பழுதடையக்கூடியவை. பூக்கள் சில வேளைகளில் நேரத்துக்குப் பயன்படுத்தப்படாததால், வாடியதும், குப்பைத் தொட்டியில் வீசப்படுகின்றது. சில கோயில்களில் குளிரூட்டுப்பெட்டியில் வைத்தும் பயன்படுத்தப்படுகிறது. பால் அளவுக்கதிகமாக வரும்பொழுது குளிரூட்டுப்பெட்டியில் வைத்தாலும் பழுதடைந்துவிடும். அப்படி வரும்போது சிவாசாரியாரும் அதிகமான பாலால் அபிஷேகம் செய்வார். அபிஷேகம் நடக்கும்போதே சில பத்தர்கள் மேலும் மேலும் பாலைக் கொண்டுவந்து குடத்தில் ஊற்றுவார்கள். அதனைத் தவிர்க்க முடியாத நிலையில், குருக்களும் அபிஷேகம் பண்ணுவார். இதனால், கழிவு நீரை அகற்றும் குழாய் அடைபட்டு துர்நாற்றம் வருகிறது. இதனைத் திருத்துவதும் சுத்தமாக்குவதும் கோயிலுக்கு மேலதிக வேலை, அதிகளவு செலவு. கோயிலைக் குளிர்காலங்களில் சூடாக வைத்திருக்க, சுத்தமாக வைத்திருக்கக் கோயில் நிர்வாகம் பெருமளவு செலவு செய்கிறது. எனவே ஆசிரியர் குறிப்பிட்டதுபோல கோயிலுக்குப் பணமாகக் கொடுப்பது பொருத்தமானது. அவர்கள் தேவையான நேரம், தேவையான பொருள்களை வாங்குவார்கள். அல்லது விரைவிலே பழுதடையாத பொருள்களான நெய், தேன், அரிசி, சர்க்கரை போன்றவற்றைக் கொடுக்கலாம்.

நான் ஒரு கோயிலுக்குப் போயிருந்தேன். அங்கே பத்தர்கள் சிவனுக்கு பாலால் அபிஷேகம் செய்துகொண்டிருந்தனர். (பாலபிஷேகத்துக்கு அர்ச்சனைத் துண்டு இரண்டு பவுன்) சிலர் பாலைத் தண்ணீர் அள்ளுவதைப்போலச் செம்பால் அள்ளி அள்ளிப் பலமுறை ஊற்றிச் சிவனுக்கு அபிஷேகம் செய்தனர். அபிஷேகம் செய்த பால் கழிவுநீர்த் தொட்டியில் ஊற்றப்பட்டது. **அதிக அளவு பால் ஊற்றி அபிஷேகம் செய்வதால் அதிகளவு பலன் கிடைக்கும் என்று பத்தர்கள் எண்ணுகிறார்கள், அதுவும் விரைவில் கிடைக்கும் என்றும் எண்ணுகிறார்களோ என்னவோ?** (ஓர் அர்ச்சனைத் துண்டுக்கு ஒரு செம்பு பாலென்று கோயில் நிர்வாகம் கட்டுப்பாடு வைப்பது உகந்தது)

பத்தியின் அளவு நம் மனதில்தான் உள்ளது. மனதால் இறைவனை வேண்டுதல் செய்ய வேண்டும். இறையன்பால் உள்ளம் உருகவேண்டும். பத்தியால் மனம் பரவசமாகவேண்டும். எப்படிப் பூசை செய்தல் வேண்டும் என்பதைப் பின்வரும் தேவாரப் பாடல் காட்டுகிறது.

**காயமே கோயி லாகக் கடிமன மடிமை யாக**
**வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக**
**நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டி**
**பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே**

**திரு 4 பதி 76 - பா 4**

எங்கள் உடம்பைக் கோயிலாக எண்ணி, உண்மை வழியில் நின்று மனதைத் தூய்மை செய்து அதனைச் சிவலிங்கமாக நினைத்து அன்பையே பாலாக , நெய்யாக எண்ணி அபிஷேகம் செய்து பூசித்து இறைவனைப் போற்றுவோம் என்பது பாடலின் கருத்து.

**-தவம்-**

# "சென்று தொழுமின்கள்"

மார்க்கண்டேயர் என்ற பதினாறு வயதுச் சிறுவன், சிவன் மீது இடையறாத பத்தி கொண்டு வாழ்ந்த வரலாறு சைவர்கள் அறிந்த ஒரு வரலாறு. மார்க்கண்டேயருக்காகக் காலனையே காலால் உதைத்தார் சிவன். திருக்கடவூர் திருக்கோயிலில் உள்ள சிவன் யமனைக் காலால் உதைத்து, மார்க்கண்டேயருக்கு அழியா வரங்கொடுத்தார் என்பது புராணம் கூறும் கதை.

திருஞானசம்பந்தர் புராணத்திலும் இந்த வரலாறு பற்றிய விவரம் வருகிறது. சம்பந்தர் மதுரைக்கு வந்ததைத் தரியாத சமணர்கள், மன்னனிடம் முறையிடுகிறார்கள். "சைவர்கள் நிறைந்த கூட்டம் ஒன்று இங்கே வந்திருக்கிறது. அவர்களை விரைவில் அகற்றவேண்டும்" என்று அரசனிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள். அரசனின் அநுமதியுடன் சம்பந்தரையும் அவருடன் வந்த கூட்டத்தையும் தம் மந்திர சக்தியால் அகற்ற முற்படுகிறார்கள். அவர்களின் மந்திரம் எதுவும் பலனளிக்காததால், மடத்துக்குத் தீவைக்கிறார்கள். அது சம்பந்தரின் தேவாரப்பாடலால், **பையவே சென்று** பாண்டியனை வெப்புநோயாக அடைகிறது. பாண்டிமாதேவி அரசரிடம் ஒரு நிபந்தனை விதிக்கிறாள். சம்பந்தரின் கருணையால் நோய் தீர்ந்தால் அரசரும் சைவத்தைத் தழுவவேண்டும் என்பதே அந்த நிபந்தனை. அதன்படி, பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்க்கப் போகுமுன்னர், ஞானசம்பந்தப்பெருமான் ஆலவாய்க் கோயிலுக்குச் சென்று ஆலவாய் அரனைத் தொழுதேத்தினார். அந்த வரலாற்றைப் பாடவந்த சேக்கிழார் பெருமான் பின்வருமாறு கூறுகிறார்:

**ஆலமே அமுத மாக உண்டுவா னவர்க்க ளித்துக்**
**காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று**
**ஞாலம்நின் புகழே யாக வேண்டும் நான் மறைக ளேத்துஞ்**
**சீலமே ஆல வாயிற் சிவபெரு மானே என்றார்**

திருஞானசம்பந்தர் - பெரியபுராணம் 740

"அமரர்களுக்காக விடத்தை உண்டு அவர்களைக் காத்தாய். மார்க்கண்டருக்காகக் காலனையே அழித்தாய். உன்புகழ் உலகம் முழுவதும் பரவவேண்டும். அமணரை வெல்ல எனக்கு அருளவேண்டும்" என்று ஆலவாயனைச் சம்பந்தப்பெருமான் தேவாரம் அருளி வழிபட்டதைக் குறிக்கும் பாடல் இது.

தன் அடியவர்களுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் அவர்கள்மீது கருணைகொண்டு இறைவன் காக்கின்றான். நண்ணினர்க்கு நல்லவன் சங்கரன் அல்லவா? தன்னை வழிபடுவோரைக் காப்பதுதான் சிவனின் குணம். இந்தக் கருத்தைத் தெரிவிக்கும் வகையில் அப்பரடிகளின் தேவாரம் ஒன்று அமைந்திருக்கிறது. அந்தத் தேவாரத்திலும் மார்க்கண்டேயருக்கு இறைவன் ஆயுள் வரம் அளித்ததை அப்பரடிகள் அறிவிக்கின்றார்.

"இந்தச் சிவன் தன்மீது அளவற்ற அன்புகொண்ட அடியவரின் ஆயுளைக் காப்பதற்காக, யமனைக் காலால் உதைத்தவன். அப்படிப்பட்ட இறைவனை எல்லோரும் சென்று வழிபடுங்கள். ஒன்றாக இருந்து அந்தக் கூத்தனையே நினையுங்கள். தில்லையிலே சிற்றம்பலத்துள் ஆடும் அவனை கண்டு வழிபடுங்கள். உங்களுக்கு ஒரு கவலையும் வராது. அவனின் கை 'என்று வந்தாய்?' என்று கேட்பதுபோல இருக்கிறது" என்கிறார் அப்பர்.

**ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லை**
**கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காச்**
**சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்**
**என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே**

திரு 4 பதி 81 பா 2

நமக்கெல்லாம் அருளவெனத் தில்லையிலே திருநடனம் செய்துகொண்டு இருக்கும் இறைவனை நாம் சென்று வழிபட்டால் அவன் நமக்கு அருளுவான். அந்த ஆடல் வல்லானை அடைந்து உய்திபெறுவோம் என்பதே அப்பரடிகள் நமக்குச் செப்புகின்ற அறிவுரை.

**நன்றி: தகவல்**


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.



உ

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)

# இந்துக் கலாசார மையம்



**128, Aurelia Road, Croydon CRO 3BF**
**Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333**
**Email: sivashakthy@sivayogam.co.uk**

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

**திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் / TEMPLE OPENING TIMES**

08:00 AM to 01:30 PM

04:30 PM to 09:00 PM

செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் 08:00 AM to 09:00 PM (முழு நாளும் திறந்திருக்கும்)

**பூசை நேரங்கள் - POOJA TIMES**

| | | | |
|---|---|---|---|
| காலை | 08.15 | : | லலிதா சகஸ்ரநாம பாராயணம். |
| காலை | 09.00 | : | காலைப்பூசை / Morning Pooja |
| பகல் | 12.00 | : | பகற்பூசை / Afternoon Pooja |
| இரவு | 07.30 | : | இரவுப்பூசை / Evening Pooja |
| இரவு | 09.00 | : | அர்த்தசாமப்பூசை / Arthajaama Pooja |

அம்பாள் அடியார்களே,

நமது அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் 06.02.2017 திங்கட்கிழமை தொடக்கம் மேற்படி முகவரியில் அபிஷேகமும் பூசைகளுகளும் அடியார்களின் தரிசனமும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேல் வாடகை இடங்களில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டு இருந்த அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் நம் அனைவரின் பிரார்த்தனையின் பலனாக நமக்கெல்லாம் வரம் தர நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பான மிகப் பெரியதொரு கோவில் 128, Aurelia Road, Croydon. CR0 3BF என்ற முகவரியில் அமைய அருள்பாலித்துள்ளாள்.

முதியோர்கள், இளையோர்கள் ஒன்றுகூடி உறவுகளை சந்தித்து உரையாட ஓர் இடம், தமிழ், இயல், இசை, நாடகம் வளர்க்க இடம் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய காணியை சொந்தமாக்கிக் கொள்ள திருவருள் கைகூடியுள்ளது.

தற்சமயம் அக்கட்டிடத்தில் ஒரு பகுதியில் கோவில் பூசைகள் நடைபெற்று வருகின்றன. 23-02-2017. வியாழக்கிழமை காலை சுபநேரத்தில் அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆகம சிற்ப சாஸ்திரங்களுக்கு ஏற்ப நிரந்தரமாக பெரிதாக அமைய உள்ள புதிய கோயில் அமைக்க அத்திவாரமிடும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

நமது தமிழ்மொழியும், கலாசாரமும், பக்தியுடன் கூடும் இடம் கோயில். கோயில் அமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட புதிய காணியின் பெறுமதி £20 இலட்சம். புதிய கோயில் அமைப்பதற்கு மதிப்பிடப்பட்ட தொகை £10 இலட்சம். மொத்தம் £30 இலட்சம். தற்பொழுது £5 இலட்சத்தை முற்பணமாகக் கொடுத்து அவ்விடத்தை வாங்குவதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. £15 இலட்சத்தை வங்கி மூலம் பெற முயற்சி செய்யப்படுகிறது. கட்டிடநிதியாக இதுவரை £5 இலட்சத்துக்கும் மேல் உதவியவர்களுக்கு இந்தத் தருணத்தில் நன்றியை

தெரிவித்துக் கொள்கிறோம். கூடுதலாக தேவைப்படும் £10 இலட்சத்தை அம்பாளின் ஆசிப்பெற்ற நீங்கள் கொடுத்து உதவ வேண்டுகிறோம். ஒவ்வொருவரும் தங்களால் அம்பாளுக்காக கொடுக்க கூடிய நன்கொடையை கூடிய விரைவில் தந்து உதவ வேண்டுகிறோம்.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதிலும்,
கூன் செவிடு குருடு நீங்கி பிறத்தல் அதைவிட அரிது"

இப்படியான அரிய பெரும் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்த நாம் செய்வதற்கு உரியது அறப்பணி. அறப்பணியில் அரியது சிவப்பணி. ஆலயம் கட்டுதல், கும்பாபிஷேகம் செய்தல், அதற்கு நிதி உதவுதல் அனைத்தும் சிவப்பணியே. சிவப்பணி செய்ய நாம் மிகப்பெரிய புண்ணியம் செய்திருக்க வேண்டும். இவற்றை தனித்துவமாக எல்லோராலும் செய்ய முடியாது. நீங்கள் செய்யும் இப்பணி உங்கள் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் செய்வதாக அமையும்.

ஆதலால் அடியார்கள் அனைவரும் தங்களால் ஆன நிதியுதவிகளை நன்கொடையாகவோ வட்டியில்லா கடனாகவோ தந்து உதவி செய்து அன்னையின் திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

1. வசதி உள்ளவர்கள் தொகையை, பணமாகவோ காசோலையாகவோ, நேரடியாக ஆலயத்தில் கொடுத்துப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளலாம். அல்லது இதற்குரிய வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்தலாம்.
2. மற்றவர்கள் வங்கியின் மூலம் மாதாமாதம் கோவில் வங்கிக் கணக்குக்கு வந்து சேரும் வண்ணம் (Bank Standing Order) மூலம் ஒழுங்கு செய்யலாம்.
3. ஒரு சிலர் ஒரு தொகையை முன்கூட்டியே கொடுத்ததுடன் வங்கி கட்டளையின் மூலமாகவும் மாதாமாதம் கொடுக்க முன் வந்துள்ளார்கள்.
4. மூலஸ்தானம் அமைக்கும் செலவை ஒரு அன்பரும், சில பரிவார தெய்வங்களின் சன்னிதானங்களை சில அன்பர்களும் உபயமாக செய்ய முன் வந்துள்ளார் அது போல் மற்றும் உள்ள பரிவார தெய்வங்களின் சன்னிதானங்களையும் உபயமாக செய்ய முன் வருமாறு வேண்டுகிறோம்.
5. ஆலயக் கட்டுமான பணிக்குரிய பொருட்களையோ அல்லது அதற்குரிய தொகையையோ கொடுக்கலாம்.
6. நன்கொடையாகவோ, வட்டி இல்லாக் கடனாகவோ தரக்கூடிய நல்ல உள்ளங்களை அறிமுகம் செய்தும் தங்களது பங்களிப்பை ஆற்றியும் உதவ வேண்டுகிறோம்.
7. உங்களுடைய ஒத்துழைப்பும் பங்களிப்பும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் 2017ல் கும்பாபிஷேகம் செய்வதற்கான முயற்சிகளை தொடங்கியுள்ளோம்.

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

என்ற வாக்கியத்தின்படி, இல்லை என்ற வார்த்தை நம் வாழ்வில் இனி இல்லாமல் போக தங்களால் இயன்ற நன்கொடை அளித்து அன்னையின் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

அம்பாள் அருள்பொழிபவள் அற்புதம் நிறைந்தவள், அண்டிய அடியார்களின் குறைகளை நிவர்த்திப்பவள். அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் அருள் நிறைந்த அன்னை அவள் அற்புதங்களைக் கண்டு மகிழ ஆலய தரிசனத்தில் அனைவரும் இணைந்து மகிழ்வோமாக.


பக்தப்பெருமக்கள் அனைவரும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கிவரும் ஆயிரம் கண்ணுடையாள் இலண்டன் முத்துமாரியம்மனைத் தரிசித்து எல்லா வளங்களும் பெற்று இன்பமாக வாழப்பிராத்திக்கின்றோம்.

அனைவரும் வருக அம்பாள் அருள் பெறுக!

இங்ஙனம்
**அறங்காவலர்கள்**

Account Title : SIVAYOGAM – MUTHTHUMARIAMMAN
Account No : 03215997 Sort Code : 20 21 80
Name of Bank : BARCLAYS BANK PLC, CLAPHAM COMMON 2
Address : LEICESTERSHIRE, LE87 2BB

# மறைந்த புன்னகை மறையாத நினைவுகள்



**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை** **(திருக்குறள் –652)**

புகழையும் அறத்தையும் தராத தூய்மை அற்ற செயல்களை ஒருவன் எக்காலத்திலும் செய்யமாட்டான். அமரர் மருத்துவர் பாலசேகரம் அவர்களை இந்தக் குறளுக்கு உதாரணமாகச் சொல்லலாம்.

பல வருடங்களுக்கு முன் ஒரு சிவராத்திரி தினத்தில் மருத்துவர் பாலசேகரம் அவர்களை முதன்முதலிலே சந்தித்தேன். சைவ முன்னேற்றச் சங்கம் அங்கத்தவர்களின் இல்லங்களிலே வழிபாடுகளை நிகழ்த்திவந்த காலம் அது. அன்றைய சிவராத்திரி வழிபாடு பாலசேகரம் அவர்களின் இல்லத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தமை அவரை நான் சந்திப்பதற்கு வழிசமைத்தது. அன்று அவரின் குடும்ப உறுப்பினர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. பாலசேகரம் புன்னகை நிறைந்த முகத்துக்குச் சொந்தக்காரர். மனைவி ராதா, பிள்ளைகள் ராதிகா, அருணன், முகுந்தன் ஆகியோரும் அவரைப்போலவே இருந்தனர். அவர் தலைவராக இருந்த காலத்தில் (1986 - 1988) அவருடன் செயலாளராகப் பணிபுரிந்தமை என் நினைவில் இன்னும் பசுமையாக இருக்கிறது.

பாலசேகரம் அவர்கள் சங்கத்துக்கு ஆற்றிய பணிகள் என்று பட்டியலிட்டால், நம் மனதில் முதல் வருவது, சைவ முன்னேற்றச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை, மண்டபத்திலே மிகச் சிறப்பாகக் கொண்டாடியமைதான். எட்டாவது ஆண்டில் சங்கம் சிறிது இன்னல்களுக்கு உள்ளானபோது, தோள்கொடுத்து, தன் இல்ல முகவரியையே சங்கத்தின் பணிமனை விலாசமாகப் பயன்படுத்த அநுமதி அளித்தமை மறக்க முடியாத இன்னொரு நிகழ்வாகும். அவரின் தலைமையின்போதுதான் மாத வழிபாட்டு நிகழ்வுகள் கிழக்கு இலண்டன், எசெக்ஸ் என்ற இடங்களிலிருந்து வெளியே நியூமோல்டன் வரை சென்றது. தொடர்ந்து 1987இல் சங்கத்தின் மூத்தோர் நிலையம் உருவாகவும் காரணமாக இருந்தவர் பாலசேகரம் அவர்கள். அங்கு வருவோருக்கு மருத்துவ ஆலோசனைகளையும் மகிழ்வுடன் வழங்கினார்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் செயற்குழுவில் சாதாரண உறுப்பினராகச் சேர்ந்து, செயற்குழு உறுப்பினர், உபதலைவர், தலைவர், பொருளாளர், அறங்காவலர், உபபோஷகர் போன்ற பல பதவிகளில் இருந்து பணியாற்றியவர் மருத்துவர் பாலசேகரம் அவர்கள். சங்கம் சொந்தமாக ஓர் இடம் வாங்கத் தீர்மானித்தபோது, அப்போது தலைவராக இருந்த திரு சிதம்பரப்பிள்ளை, ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்தார்கள். அந்தப் பணியிலும் இவர் பங்குகொண்டார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சைவ முன்னேற்றச் சங்கம் சிதம்பரேசுவரர் கோயிலை அமைக்கத் திட்மிட்டபோது சிவகாமசுந்தரி அம்பாள் சிலைக்கான பொறுப்பைத் தாமே ஏற்று வழங்கினார் மருத்துவர் பாலசேகரம் அவர்கள்.

சங்கத்துக்கு வெளியேயும் மருத்துவர் பாலசேகரம் அவர்கள் ஒரு நன்மனிதராகவே வாழ்ந்தார்கள். மலர்ந்த முகம், சிறந்த விருந்தோம்பும் பண்பு, சிக்கலான சூழலிலும் பிரசினைகளை எதிர்கொண்டு சமாளிக்கும் திறன், பிறர்க்கு உதவுதல் என, பல விதத்திலும் அவர் நமக்கெல்லாம் ஓர் உதாரண புருஷனாகவே இருந்தார்கள். நீரினில் மூழ்கி ஒழிக்க இயலாதவை அவர் நினைவுகள். அவர் அமரர்.

**ஆசிரியர் - கலசம்**



சைவமுன்னேற்றச் சங்கத்தின்

## ஸ்ரீ சிதம்பரேஸ்வர ஆலயத்தில் நடராஜர் அபிஷேகம்

*11.03.2017*









Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

HOWEVER YOU SMILE

# SMILE WITH CONFIDENCE



Come to Bluebell for..

INVISIBLE TOOTH STRAIGHTENING

GUM DISEASE TREATMENT

COSMETIC DENTISTRY

SMILE MAKEOVERS

GENERAL DENTISTRY

ORAL SURGERY & IMPLANTS

ENDODONTICS

CHILDREN'S ORAL HEALTH

EMERGENCY APPOINTMENTS

FACIAL REJUVENATION

Book your FREE consultation today!

**Bluebell is a TOP DIAMOND STATUS Invisalign provider.**

If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.



Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Diamond Status Provider, a title which is only held by a privileged few dentists in the UK.

Bluebell®

Dental Practice and Clinic

www.bluebelldp.co.uk


Tel: 020 8500 6789

140 Tomswood Hill,
Chigwell, Essex IG6 2QP

invisalign DIAMOND PROVIDER

0% FINANCE AVAILABLE

YouTube


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
M.Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas. Tel: 07958 010 139

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஏப்பிரல் (14--04-2017) தொடக்கம் ஜுலை (31-07-2017) வரை**

| | | |
|---|---|---|
| 14.04.2017 | வெள்ளி | ஏவிளம்பி வருடப்பிறப்பு |
| 20.04.2017 | வியாழன் | நடேசர் அபிஷேகம் |
| 22.04.2017 | சனி | திருநாவுக்கரசர் குருபூசை |
| 10.05.2017 | புதன் | சித்திரைப் பௌர்ணமி |
| 29.05.2017 | திங்கள் | சேக்கிழார் குருபூசை |
| 10.06.2017 | சனி | திருஞானசம்பந்தர் குருபூசை |
| 21.06.2017 | புதன் | அலங்காரத்திருவிழா ஆரம்பம் (ஆனி உத்தரம்) |
| 30.06.2017 | வெள்ளி | ஆனி உத்தரம் நடேசர் அபிஷேகம் |
| 11-07-2017 | செவ்வாய் | ஆனித் திருவோணம் (9ஆம் ஆண்டு நிறைவு) |
| 16.07.2017 | ஞாயிறு | ஆடிப்பிறப்பு |
| 22.07.2017 | சனி | ஆடி அமாவாசை |
| 30.07.2017 | ஞாயிறு | சுந்தரர் குருபூசை |

*ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.*

**வெள்ளிதோறும் மாலை 8.30 மணிக்கு பெரியபுராணச் சொற்பொழிவு ஆலயத்தில் நடைபெறுகிறது**

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# வள்ளுவர் என்ற வயித்தியர்

**- அநுஜா**

திருவள்ளுவர் உலகில் மனித வாழ்வு மேன்மையுற, அதற்குத் தேவையான எல்லாவற்றையும் ஆயிரத்து முன்னூற்று முப்பது திருக்குறள் வெண்பாக்கள் மூலம் தெளிவாக எடுத்துரைக்கிறார். திருக்குறளின் பெருமையை இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

*'It (Thirukural) is considered to provide the code of conduct for the humanity of the planet earth for all time, which makes the past meet the present and creates the future'*

இன்றைய காலகட்டத்தில், மருந்து என்னும் அதிகாரத்தில் அன்றே வள்ளுவர் கூறியிருப்பது மக்களின் ஆரோக்கியத்துக்கு மிக உதவும் என்ற நோக்கில் அந்த அதிகாரத்தை விவரிப்பது இந்தக் கட்டுரை.

திருவள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்தையும் சரியான ஒழுங்கில் ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லிச்செல்லும் விதம் நம்மையெல்லாம் அதிசயிக்க வைக்கிறது; பாராட்டவைக்கிறது. கள்ளுண்ணாமை, சூது ஆகிய அதிகாரங்களின் பின்னர் மருந்து என்ற அதிகாரத்தை அவர் வைத்துள்ளார். ஏனெனில் கள்ளு உண்ணுதலால் உடல் நோய்வாய்ப்படும்; சூதாட்டத்தால் மனம் நோய்வாய்ப்படும். எனவே, அவ்விரண்டாலும் வரும் உடல், உள நோய்களைத் தீர்க்க மருந்து அவசியமாகிறது அல்லவா?

மனித உடல், அவர்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்பவும், தட்ப வெப்ப நிலைக்கு ஏற்பவும், அவரவர் உண்ணும் உணவு, செய்யும் செயல் என்பவற்றுக்கு ஏற்பவும், பழவினைக்கு ஏற்பவும் நோய்வாய்ப்படும். அவ்வாறு நோய் வரும்போது அதனை எவ்வாறு தீர்க்கலாம், நோய் வராமல் வாழ எத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்பதையும் **'மருந்து'** என்னும் 95ஆம் அதிகாரத்தில் அன்றே வள்ளுவர் எமக்குக் கூறிவைத்துள்ளார். அந்தக் குறள்களை இங்கே பார்ப்போம்:

**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று**

மனித உடலுக்கு ஆதாரமாகிய காற்று, நீர், உணவு ஆகிய மூன்றில் (வாதம், பித்தம், சிலேத்துமம் (குளிர்ச்சி - கபக்கூறு) என்றும் கூறுவர்) ஒன்று கூடினாலும், அல்லது குறைந்தாலும் உடல் நோய்க்கு உட்படும்.

If any one of these three - flatulance, biliousness and phlegm - becomes deficient or excessive, then that will cause disease.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்**

உடல் வளர்ச்சிக்கும், அது இயங்குவதற்கும் உணவு அவசியம். ஆனால் நாம் உண்ணும் உணவு

ஒருமுறை உண்டபின் அது முற்றாகச் சீரணமாகிவிட்டதா என்பதை அறிந்து (பசி வந்தபின்பு) அடுத்தமுறை உண்டால் நோய் ஏற்படமாட்டாது. அதனால் மருந்தின் தேவை இருக்காது. ஆனால் மனிதராகிய நாம் சுவையான உணவைக் கண்டால் பசி இல்லாவிட்டாலும் சாப்பிடுவது வழக்கம். அதனால் வரும் நோய்களும் தவிர்க்கமுடியாதவை ஆகிவிடுகின்றன.

If a person eats only after digesting the food he has previously eaten, no medicine is necessary.

**அற்றால் அறவறிந்து உண்க அஃ.துடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு**

முன்பு உண்டதற்கும் மறுமுறை உண்பதற்கும் இடையே இருக்கவேண்டிய கால அளவை அறிந்து அதற்கேற்ப உணவை அருந்துவோமேயானால் நல்வினைப் பயனால் கிடைத்த மானுட வாழ்வை (அரிது அரிது, மானுடராதல் அரிது, என்கிறார் ஒளவையார்.) நீண்டகாலம் நிலைக்கச் செய்யலாம். உடல் ஆரோக்கியமாக இருந்தால்தானே நீண்டகாலம் வாழஇயலும்!

Eating in moderation and that after proper digestion of the food previously eaten is the way to longevity.

**அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து**

நமது உடம்புக்ககு எவ்வகையான உணவுவகை ஒத்துக்கொள்ளாதோ (allergy) அவற்றைத் தவிர்த்து, ஒத்துக்கொள்ளக்கூடிய உணவுகளையே உண்ணவேண்டும். அவற்றையும், நன்கு பசித்த பின்பே புசிக்கவேண்டும். அண்மைக்காலத்திலேதான் மருத்துவர்கள் ஒவ்வாமை (allergy) என்பதைப்பற்றிச் சொல்கிறார்கள். வள்ளுவர் இதனை என்றோ சொல்லிவைத்துள்ளார். இங்கு தமிழின் பெருமையும் தமிழரின் பெருமையும் எத்கையது என்பதைக் கவனிக்கவேண்டும்.

First ensure that the food already eaten has digested, then eat what is agreeable to you and avoid that is not agreeable.

**மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபா டில்லை உயிர்க்கு**

நமக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய உணவுவகை எவை என்பதை ஆராய்ந்து உண்ணவேண்டும் அவை சுவையாக இருக்கிறதேயென்று அளவுக்கதிகமாகச் சாப்பிடாமல் எதையும் அளவுடன் உண்ணப் பழகினால் நோய் வராது. அதனால் நோயால் துன்பப்படவேண்டிய அவசியமும் இல்லை. உதாரணமாக, இப்போது இந்த நாட்டில் அடிக்கடி நடைபெறும் கொண்டாட்டங்களில் பரிமாறப்படும் சுவையான உணவுகள், மக்களை அளவுக்கதிகமாக உண்ணத் தூண்டுகின்றன. அதனால் இளம் வயதிலேயே மக்கள் பலவித நோய்களுக்கும் ஆளாகி அவதிப்படுகிறார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது.

There will be no disease if a person eats in moderation and avoids food that is allergic.

**இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபேர் இரையான்கண் நோய்**

உடல் நலத்துக்கு கேடுசெய்யும் உணவுகளைத் தவிர்த்து உண்பவனிடம் இன்பம் நிலைத்து நிற்கும். (உடல் நலம் இருந்தால்தான் எதையும் அநுபவிக்கலாம்) அதைவிடுத்து எதையும் அதிகமாக உண்பவனின் உடலில் நோய்கள் நீங்காது நிலைத்து நிற்கும்.

A person who eats in moderation will dwell in pleasure, while a person who eats voraciously will dwell in diseases.

**தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோயள வின்றிப் படும்**

எமது உடம்பின் சீரணமாகும் சக்தி எத்தகையது என்பதை நன்கு அறிந்து அதற்குத் தக்கபடி உண்பதே பொருத்தமானது. உடல் நலத்துக்கும் ஏற்றது. அவ்வாறு செய்யாது எமது மனம் விரும்புகிறதேயென்று விரும்பியவற்றை அளவுக்கதிகமாகச் சாப்பிட்டால் எண்ணிறந்த நோய்கள் ஏற்படும். எமது உடம்பின் செயற்பாட்டை நாம் அவதானித்தல் அவசியம் என்பதை இக்குறள் எடுத்துரைக்கிறது.

A person who is ignorant of the rules of health and eats in immoderation will be afflicted with innumerable diseases.

அடுத்துவரும் மூன்று குறள்களும் நோய் வந்துவிட்டால் என்ன செய்யவேண்டும் என்பதைக் கூறுகின்றன.

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்**

மருத்துவரானவர் நோயாளிக்கு வந்த நோயை, அதன் குறிகளால் இன்ன நோயென அறிந்து, அது வருவதற்கான காரணத்தையும் ஆராய்ந்து, பின்பு அது தீர்க்கும் வழிமுறைகளைத் தேர்ந்து வயித்தியத்தைப் பிழையின்றிச் செய்தல் வேண்டும். (இதில் மருந்து கொடுத்தல், சுடுதல், அறுத்தல் என்பவை அடங்கும் என்கிறார் பரிமேலழகர்)

Let the Physician find the nature of the illness, it's cause and the method of cure and treat the illness accordingly, with full faith.

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்**

வயித்தியத்தில் தேர்ச்சிபெற்ற மருத்துவர் நோயாளிக்கு வயித்தியம் செய்யுமுன்பு, நோயாளியின் வயது, தேகபலம், நோயின் அளவு, ஆரம்பநிலை, இடைநிலை, இறுதிநிலை இவற்றில் எந்த நிலையில் நோயாளி உள்ளார் என்பதைத் தன் மருத்துவ அறிவினால் சீர்தூக்கிப் பார்த்தபின்னே வயித்தியத்தை ஆரம்பிக்கவேண்டும்.

The Physician should consider the condition of the patient, the nature of his/ her disease and the season of the year before proceeding to treat the person.

**உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்**
**றப்பால் நாற்கூற்றே மருந்து**

நோயாளி, நோய் தீர்க்கும் மருத்துவன், அவன் கொடுக்கும் மருந்து, அந்த மருத்துவத்தை முறைப்படி செயல்படுத்துபவன் (தாதி அல்லது பராமரிப்பவர்) இந்த நான்கு நிலையும் தவறின்றிச் சரிவரச் செயற்படுத்தல் சிறந்தவொரு மருத்துவ முறையாகும்.

Medical science consists of four parts, the patient, the doctor, the medicine and the nurse/ pharmacist.

இந்த நான்கும் எப்படி அமையவேண்டும் என்பதற்கும் வழிமுறை சொல்லப்படுகிறது.

அவை பின்வருமாறு:

**நோயாளியின் கடமைகள்:**
பொருளுடைமை, மருத்துவர் சொன்னபடி நடத்தல், நோய் நிலையுணர்தல், வன்மை (தனது உடல்நிலைபற்றி மருத்துவருக்குப் புரியும்வகையில் சொல்லும் ஆற்றல்), வயித்தியத்தின்போது தனக்கு ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளும் தன்மை - உதாரணம் சிலர் வலி தாங்க முடியாது கத்தியழுது சுற்றியிருப்பவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பர். அப்படிச் செய்யக்கூடாதென வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

**மருத்துவரின் கடமைகள்:** நோயைக் கண்டு அஞ்சாமை, (பயங்கொள்ளாதிருத்தல்) தான் தனது ஆசிரியரிடம் கற்றுக்கொண்ட மருத்துவக் கல்வியில் நுண்ணிய அறிவுடைமை, பலகாலம் நோய் தீர்க்கும் அநுபவம் (மருத்துவத்துறையில் அநுபவம்) மனதாலும் சொல்லாலும் செயலாலும் தூய்மையானவராக இருத்தல்.

**மருந்தின் வகை:** பல பிணிகட்கும் ஏற்றதாக இருத்தல், சுவை, வீரியம், விளைவாற்றல்களால் சிறந்திருத்தல் (மேம்பட்டிருத்தல்), எளிதில் எய்தல் (இலகுவாக நோயை மாற்றக்கூடிய தன்மை)

**இயற்றுவான் வகை: (பராமரிப்பவரின் தன்மை)** நோயாளியிடம் அன்பாக இருத்தல், மன மொழி மெய்களால் தூயவராக இருத்தல், மருத்துவர் சொன்னவற்றை அவ்வாறே செய்யும் அறிவுடைமை. இந்த இறுதிக் குறளில் மருத்துவம் எப்படியாக இருக்கவேண்டும் என்பதை வியத்தகுவகையில் அழகாகக் கூறப்பட்டிருக்கிறது.

திருவள்ளுவர் கூறும் வழிமுறைகளைப் பின்னபற்றி எல்லோரும் நலமாக ஆனந்தமாக வாழ்வோமாக.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

# மாணவனின் கேள்வியும் பாதிரியாரின் பதைபதைப்பும்

வருடம் 1933. திருப்பரங்குன்றம் கோயிலில் முருகப்பெருமானைத் தரிசித்துவிட்டு, ஓர் உயர்நிலைப் பள்ளி மாணவன் திரும்பி வந்துகொண்டிருந்தான். வழியிலே, நாகர்கோயிலில் இருந்து வந்த ஒரு பாதிரியார், மைக்கேல் தம்பிராசு, சிறு கல்லின்மேல் நின்று மக்கள் முன்னாற் பேசிக்கொண்டிருந்தார். அவரின் பேச்சு, சைவ மக்களையும் அவர்களின் வழிபாட்டு முறை களையும் இழிவுபடுத்தும் வகையில் அமைந்திருந்தது. அவர் மதப்பிரசாரம் செய்து மக்களை மதம் மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

இயல்பிலேயே இந்திய கலாசாரத்தின் மீதும், மதத்தின் மீதும், நாட்டின்மீதும் மிகுந்த பத்தியும், அன்பும் கொண்டிருந்த பள்ளி மாணவனுக்குப் பாதிரியார்மீது மிகுந்த கோபம் வந்தது. இருந்தாலும் தனது கோபத்தை அடக்கிக்கொண்டு பேச்சைத் தொடர்ந்து கேட்டான்.

பாதிரியார் தன் இழிவான பேச்சைத் தொடர்ந்தார். "பாவிகளே...! கல்லை வணங்காதீர்கள். இதோ! நான் நிற்பது ஒரு கல்மேலேதான். இதே கல்தான் கோயிலின் உள்ளே தூணாகவும் சிலையாகவும் இருக்கிறது. இரண்டு கற்களும் ஒரே வகையானவைதான். அப்படியான கல்லை வணங்குவது பாவம்; வழிபடக்கூடாது." என்று அந்தப் பாதிரியார் பேசினார்.

மேலும் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க மாணவன் விரும்பவில்லை. பாதிரியாரின் பேச்சை இடைமறித்தான்.

**மாணவன்:** பாதிரியார் அவர்களே! எனக்கு ஒரு சந்தேகம். அதை நீங்கள் நிவர்த்திக்கவேண்டும்.

**பாதிரியார்:** என்ன சந்தேகம்? அதை விளக்கத்தானே ஆண்டவன் என்னை.. உங்களிடம் அனுப்பியுள்ளான். தயங்காமல் கேள் சிறுவனே!

**மாணவன்:** அப்படியானால், நான் கேட்கும் கேள்வியால் நீங்கள் கோபப்படக்கூடாது; பதில் சொல்லவேண்டும்.

**பாதிரியார்:** எனக்கேன் கோபம் வரப்போகிறது? கேள் உன் கேள்வியை.

**மாணவன்:** "நான் நிற்பதும் கல், கோயிலுள்ளே இருப்பதும் கல்" என்று குறிப்பிட்டீர்கள்....

**பாதிரியார்:** ஆமாம், குறிப்பிட்டேன்; இதில் என்ன சந்தேகம்? இரண்டும் கல்தானே!

**மாணவன்:** சில பாதிரிமார்களுக்கு அன்னை, அக்காள், தங்கை என்று இருக்கிறார்கள்.

**பாதிரியார்:** ஆமாம் இருக்கிறார்கள்....

**மாணவன்:** சில பாதிரிமார்களுக்கு மனைவி, மகள் என்று இருக்கின்றார்கள்.

**பாதிரியார்:** உண்மைதான்..

**மாணவன்:** இவர்கள் அனைவரும் பெண்கள்தானே!

**பாதிரியார்:** சந்தேகம் ஏன்? அனைவருமே பெண்கள்தான். அதில் சந்தேகமே இல்லை.

**மாணவன்:** அவர்கள் அனைவருமே பெண்கள்தான் என்றால், உங்கள் மனைவியை நீங்கள் நடத்துவதுபோல உங்கள் தாய், மகளை நீங்கள் நடத்த இயலுமா? அப்படி நீங்கள் நடத்தினால் உலகம் உங்களை என்ன சொல்லும்?

தலையில் இடி விழுந்ததுபோல அதிர்ந்தார் பாதிரியார். அதுவரை வாயடைத்துக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

சில விநாடிகளில் தன்னைத் தெளிவுபடுத்திய பாதிரியார், "தம்பி! இங்கே வாருங்கள். பிற மதங்களைப் பழிக்கக்கூடாது என்பது ஆண்டவன் கட்டளைகளில் ஒன்று. நான் மறந்ததை நீங்கள் நினைவுபடுத்திவிட்டீர்கள். நீங்கள் அறிவு முதிர்ச்சி பெற்ற ஒரு தலைவன், தேவன்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார் பாதிரியார்.

**அந்த மாணவன்தான் பார்போற்றும் பசும்பொன் உ முத்துராமலிங்கத் தேவர்.**

**படித்ததைப் பகிர்ந்தவர்: விழிசை பாமினி**

# Hinduism in search of Answers.........

Compiled by S Atputhananthan


## RITUALS

### What are Hindu Rituals?

A ritual "is a sequence of activities involving gestures, words, and objects performed according to a set sequence. These practices play an important cultural role, as they are common to people sharing a religious or cultural heritage. Through taboos and decrees, rituals unite people. Major Hindu rituals require the intervention of priests who are trained to perform it. Minor ones are carried out in private, and tend to be more personal and less strict.

**There are two types of Hindu rituals**


1. **Vedic** rituals involve nature sacrifices to the Gods.



2. **Agamic** rituals involve the worship of idols and observance of fasts.

These rituals are classified into 3 categories

- **NITYA** – that occurs every day: offering water to sun, performing puja/prayers at home.
- **NAMITTIKA** – certain times of year: such as celebrations and festivals.
- **KAMYA** – Highly desirable but optional – pilgrimages fall into this.



# Types of Rituals:

1. **Pujas**

Puja is a ritual for adoring, saluting and petitioning the divine. The God is perceived in human terms, housed as an idol in a temple, bathed and bedecked with jewels, offered food, flowers, incense and gifts and entertained with songs and dance. It helps a person to relate to God at his own level. The mode of worship in a Puja is a replica of the services usually rendered to a beloved guest (at home) or an honoured king (at his residence)



2. **Homam**

Offerings made to celestial beings of the cosmos through a fire altar to ward off malevolent spirits and usher in benevolent forces. It is a modern derivate of ancient Vedic rituals called 'yagnas.'




3. **Vrata**

Vows and observances taken up for the good of the household. Some common practices include fasting, food restrictions, painting of ritual diagrams, all night vigils, bathing in sacred ponds, pilgrimages and charity.



4. **Samskara**

Sacraments that mark a major event in human life – like birth, puberty, marriage and death.



**The 8 Rites of Passage or Ashtasamskara**

16 Samskaras, which originated thousands of years ago, are practiced by most Hindus even to this day. However, there are eight rites that are considered essential. These are known as 'Ashtasamskaras', and they are as follows:
Namakarana – Naming ceremony
Anna Prasana – Beginning of solid food
Karnavedha – Ear piercing
Chudakarma or Chudakarana – Head Shaving
Vidyarambha – Beginning of Education
Upanayana – Sacred Thread Ceremony
Vivaha – Marriage
Antyeshti – Funeral or Last Rites

**Are Rituals and Symbols necessity or superstitions?**

Philosophy without religion becomes dry. Religion without philosophy becomes empty. The rituals of a religion, like the husk of a seed, are meant to preserve its life and make it germinate. It is only when the rituals are separated from the faith or philosophy and assume an independent existence that they become mechanical and lifeless.

Human beings have not yet reached those heights, where they can dispense with all sorts of symbols and rituals, and devote themselves to purely abstract principles. Rituals give a concrete shape to the abstract spiritual ideals and add colour and zest to life.

Worship of God through symbols and images, offering oblations into specially consecrated sacrificial fires, the practice of meditation at sunrise, noon and sunset, these were some of the rituals obligatory on almost all the Hindus during the ancient days. Even to this day, these have been kept up, though in a modified form, and with lesser intensity.

A wisely planned and solemnly conducted ritual prepares the ground, creates the atmosphere, suggests the mood and predisposes the mind so that the spiritual aspirant may

easily detach himself from the world and connect to the mysterious presence of the Supreme power called God.

Almost every Indian custom and tradition has either a scientific, logical, historical, social or spiritual significance. Understanding this lends meaning to an otherwise mechanical following of the customs, which are often misunderstood to be mere superstitions that fade away in time.

The customs and traditions are simple, enduring ones that have lasted the test of time and are an integral part of many Hindu homes even today.

***"Rituals are the kinder garden of religion. They are absolutely necessary for the world as it is now, only we shall have to give people newer and fresher rituals."***

**Swami Vivekananda**





The fasts and feasts are intended to serve as occasions for intensive contemplation of God. They are meant to be 'holidays' from worldly life.

It is clear that the rituals, in the sense of ceremonial acts, are an aid only at the initial stages of inward life. As one progresses in spirituality, the need for dependence on external props diminishes. Injunctions and prohibitions lose their value in the case of Saint and sage who have realised the absolute spirit, which transcends deeds as well as ideas.

**What are the purposes / meanings of temple rituals?**

A person's quest for spirituality starts simply with his visiting a temple. To facilitate the process of his/her spiritual growth, some temples require their devotees to adhere to a dress code. The temple walls are decorated with religious symbols and images. The 'puja' itself consists of singing of hymns, bhajans etc. followed by 'Aarti' being the final offering to the gods.





There is a psychological reasoning behind all this. The dress code, all the temple decorations, the aroma of incense, the fresh flowers, the nicely dressed deities on the alter; are all meant to create an atmosphere conducive to a spiritual experience. They are the first steps of a process meant to alter the state of one's mind, to bring it to a state where the internal turmoil subsides for a duration. The spiritual vibrations of the temple atmosphere lift the soul to a level where it becomes capable of connecting with the divinity. It essentially

prepares the person for what he has come there for.



Singing bhajans and hymns help this. The mind, through this exercise gets into a voluntary receptive mode. It is then, that the brain can be programmed with the noble thoughts - be they to sing the glory of the Lord or ways to deal with our every day problems in a conscientious manner.


## PUJA

**What is the meaning of worship (puja)?**


Hindus say any activity we do which takes us closer to God is called worship. Puja is a ritual worship to express one's adoration of the God. It is to be stated here that, according to the Agamas, God manifests Himself in a subtle form in the image or symbol duly consecrated and accepts the worship thus offered. There are no hard and fast rules about worship. If worship is performed with faith and devotion, it generates peace and joy in our minds.

**How is puja conducted?**


The several steps involved in such worship may be briefly stated as follows:



**Avahana**



**Padya**



**Pushpam**

1. Avahana (invoking the presence of God in the image or symbol),
2. Asana (offering a seat),
3. Padya and Arghya (giving water for washing feet and hands),
4. Snana or Abhisheka (ceremonial bath),
5. Vastra (offering Clothes),

6. Chandana (smearing sandal paste and other unguents),
7. Pushpa (offering of flowers and garlands),
8. Dhupa (burning incense), Deepa (waving of light),
9. Naivedya (food offering), and finally
10. Visarjana (bidding goodbye).

In the temples, the Abhisheka (bathing) of the image and its decoration are done more elaborately.

**Sandhyopasana** – meaning worship at the juncture. It is a prayer and worship offered to the Lord at the junctions (Sandhi) of night and morning, forenoon and afternoon and at the junction of evening and night. It is the earnest prayer addressed to the Lord to forgive all one's sins committed during one's routine, daily activities and to bestow illumination and grace. It is **Nitya karma** – obligatory duty to be performed daily by all, for self-purification and improvement.

**Home**

Shrine room (or shrine): is the place where worship is done in the house. Deity (the form of God being worshipped) is placed on a raised and well-decorated platform. Water may be sprinkled around the shrine as a symbol to purify. Flowers may be offered as symbol of offering our heart to God. Fruit and cooked food may be offered to God. At the end of the worship this becomes holy (prashad) and is distributed and eaten by everyone.

Incense may be burnt - the sweet scent goes everywhere to symbolise God being everywhere. Bell may be rung to awaken the deity and also to block out other disturbing sounds. Tilakam (Pottu - mark on the forehead) may be made to awaken spirituality. The mark is usually made with Sandalwood paste or red powder (kumkum). Prayers or sacred verses may be sung. Aarti (waving a lamp in front of the deity) ceremony may be carried out to invoke and welcome the deity. Camphor is burnt to symbolise burning of our egos. Japa (with or without beads) while repeating God's name may be carried out. Sacred scriptures may be read, or meditation may be practised after the prayers.

**Temples**

Hindus say temples are the homes of God on earth. There are no hard and fast rules about when to go to the temple. Hindus go to the temple to get 'darshan' (catch sight of God they worship). We may take some fruits or flowers or other items as offerings. When we arrive at the temple we remove our shoes before entering the temple. The main deity (form of God being worshipped) is normally kept in the inner shrine. The outer walls may have smaller shrines showing other deities.

The daily rounds of puja's (often 6 times in one day) in a temple only makes sense to one, when one realises that one has entered the royal palace of the God who is the living sovereign. The other gods are the royal family and the priests are the royal servants. The pujas follow the rhythm of the king's day. He is ceremoniously awakened in the early morning, bathed, clothed, and fed. He is fed at other times and finally put to bed. The puja is a

public opportunity to make offerings to the king and to have his audience.
The deity first receives a number of abhishekam – of saffron, rice flour, sandal paste, rose water, lime, honey coconut water and milk. Each abhishekam serves to cleanse the souls of those present. The deity is then dressed and decorated with colourful clothing, jewellery and flowers.

There may be group singing ('bhajans') accompanied by musical instruments. The food offerings are made to him. As the curtains are drawn after the dressing, special lamps are waived before the lord. Throughout the ceremony mantras and verses from Agamas, are recited, bells are tolled periodically. The entire culminates in the meeting of the eyes and the passing on the flame, the arati, that ends the ritual. The flame passed before the image of god, and passed to devotees to pass their hands through and put in their eyes. This is so that god sees the face of the individual in the flame, and his power is transmitted through the flame into the person's eyes.

The physical actions, materials and offerings all have significance beyond their appearance. The perfume of a flower is its spiritual essence. The devotee will never smell flower offerings, since to do so would be to deprive it of its essential quality before the deity has received it. Similarly, offerings of food and other items are kept as pure and untouched as possible. Holy ash, kumkum, sandal paste all have divine meaning and reminder to the
devotee.

The human has an innate sensitivity to the impermanence of everything. The liquid offerings drain away. The flowers fade. The camphor flames quickly goes out, the ash rubs out, the oil dies in smoke. All this points to the fact that the devotee's identification with deity fleeting. The pujas are repeated over and again for the devotee to maintain the connection with the divine.

**Why go to temple for dharshan?**

Devotees go to temple in order to have a glimpse of the God. Their gaze is fixed on the eyes of the idol. Through those eyes streams the power that lives in the image through the grace of the God. It is not the image, but the power in the image that is worshipped.


Through the rituals at the time of consecration of the temple and through the invocatory rituals of its installation, the image becomes the home of the god, who while existing throughout time and space, agrees to dwell in the temple image with focalized power. This is indeed the realm of magic, which can only be realised by one who accepts the reality of subtle worlds and their influence upon the physical domain.

The seeing is a two way process; God sees the devotee, just as the devotee sees the God. In this meeting of the eyes, the devotee and God becomes one. For a brief span, the devotee is identified with god who, in the deepest sense, is his own life source.

Even a blind person goes to temple for 'dharshan'. It is not so much as the physical eyes, but the inner eye that receives dharshan of the God.

# கண்ணனும் தாத்தாவும்

- முத்து -



கண்ணனுக்குப் பள்ளி விடுமுறை. கண்ணனும் தாத்தாவும் தொலைக்காட்சியில் (TV) செய்திகள் பார்த்துக்கொண்டிருந்தனர். அன்று காற்றுக் கடும் புயலாக மாறி 100 மைல் வேகத்தில் வீசி, நாட்டில் பெரும் அழிவை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. குறிப்பாக இங்கிலாந்தின் வடபகுதியிலும் ஸ்கொட்லாந்திலும் நிலைமை மோசமாக இருந்தது. மரங்கள் முறிந்து வீடுகளுக்குமேலும் வீதிகளிலும் விழுந்திருந்தன. போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. மக்களும் காயமடைந்தனர். கண்ணனும் தாத்தாவும் கவலையுடன் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர். கண்ணனுக்கு ஸ்கொட்லாந்திலிருக்கும் தன் நண்பனின் ஞாபகம் வந்தது. அவன் எப்படி இருக்கிறானோ என்ற கவலையும் வந்தது.

***கண்ணன்:*** என்ன தாத்தா! இந்தக் காற்றினால் ஸ்கொட்லாந்தில் இருப்பவர்களுக்குச் சரியான கஷ்டம்போல இருக்கிறதே!

***தாத்தா:*** ஆமாம் கண்ணா, அங்கே மற்றைய இடங்களைவிட காற்றும் மழையும் அதிகமாகத்தான் இருக்கிறது.

***கண்ணன்:*** அங்கே இப்படிக் காற்றும் மழையும் அடிக்கடி வருமோ தாத்தா?

***தாத்தா:*** ஓம் கண்ணா, லண்டனைவிட ஸ்கொட்லாந்தில் மழை, குளிர், பனிப்பொழிவு (snow) எல்லாமே அதிகமாகத்தான் இருக்கும்.

***கண்ணன்:*** ஏன் தாத்தா அப்படி?

***தாத்தா:*** நீ பள்ளிக்கூடத்தில் புவியியல் (Geography) பாடம் படிக்கும்போது இதைப்பற்றித் தெரிந்துகொள்வாய். பூமியில் சமரேகையிலிருந்து (equator) வடக்கே போகப்போக வெப்பம் (சூடு) குறையும். கடல் மட்டத்திலிருந்து நிலத்தின் உயரம் கூடக்கூட வெப்பம் குறையும், குளிர் கூடும். ஸ்கொட்லாந்து வடக்கே இருக்கிறது. அங்கு உயரமான மலைகள் இருக்கின்றன. வட கடலிலிருந்து (North Sea) குளிர்காற்றும் அங்கே வீசும். இதனால் அங்கு லண்டனைவிடக் குளிர் அதிகம் கண்ணா.

***கண்ணன்:*** அப்போது ஸ்ரீராமும் அவனுடைய தாத்தாவும் இன்று வெளியே போகவே முடியாது. பாவம்! அங்கு வசிப்பதே கடினந்தான். என்ன தாத்தா?

**தாத்தா:** அவர்கள் அங்கேயே வசிப்பதால் அவர்களுக்கு அது பழக்கமாகிவிடும். அவர்களும் அதற்கேற்றமாதிரிப் பழகிக்கொள்வார்கள்.

**கண்ணன்:** இப்போது அவர்களை ஸ்கைப் (Skype) இல் அழைத்துப் பேசுவோமா? அவர்கள் எப்படி இருக்கிறார்களென்று பார்ப்போமா?

**தாத்தா:** ஓ.... ! கூப்பிடுவோமே! இப்போது மணி 9 தானே கண்ணா. அவர்களுக்கு வசதியாக இருக்குமோ தெரியாது. முதலில் நாங்கள் சாப்பிடுவோம். வா

**கண்ணன்:** ஓம் தாத்தா, பாட்டியிடம் கேட்கிறேன்.

(இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த பாட்டி இருவருக்கும் காலை உணவை மேசைக்குக் கொண்டுவருகிறார். கண்ணனும் உதவி செய்கிறான். சூடாக இருந்த ஓட்ஸ் கஞ்சியைக் கண்ணனும் தாத்தாவும் ரசித்துச் சாப்பிடுகின்றனர்.)

**தாத்தா:** கண்ணா எப்படி இருக்கிறது ஓட்ஸ்?

**கண்ணன்:** பாட்டி செய்தால் கேட்கவும் வேண்டுமோ தாத்தா?

**தாத்தா:** வீட்டிலே செய்யும் சாப்பாட்டில் அன்பும் சேர்கிறது கண்ணா.

**கண்ணன்:** அது எப்படித் தாத்தா? சாப்பாட்டுக்கும் அன்புக்கும் என்ன சம்பந்தம்? விடுகதை சொல்கிறீர்களோ?

**தாத்தா:** இது விடுகதையில்லைக் கண்ணா. இது எப்படியென்றால், பாட்டி சமைக்கும்போது எங்கள் மேலிருக்கும் அன்பால், சாப்பாடு நன்றாக இருக்கவேண்டுமென்று நினைத்து நினைத்துச் சமைப்பார். அதனால் சாப்பாடு எப்போதும் உருசியாகவே (சுவையாகவே) இருக்கும்.

**கண்ணன்:** உண்மைதான் தாத்தா. நீங்கள் சொல்வது சரி. பாட்டிக்கு எங்கள்மீது அளவுக்கு மீறிய அன்பு.

**தாத்தா:** திருக்குறளிலே அன்புடைமை என்னும் ஒரு அதிகாரம் இருக்கிறது. அதில் அன்புடையவர்கள் எப்படி இருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**கண்ணன்:** எனக்கு அன்புடைமை அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களும் பாடம் தாத்தா. நான் போன வருடம் நடந்த திருக்குறட் போட்டியிலே சொன்னேனே. மறந்துவிட்டீர்களா?

**தாத்தா:** ஓமோம். மறந்துவிட்டேன் கண்ணா. எங்கே ஒரு குறள் சொல் பார்க்கலாம்.

**கண்ணன்:** முதலாவது குறளையே சொல்கிறேன் தாத்தா.

**அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்**
சரியா தாத்தா?

**தாத்தா:** சரியாகத்தான் சொன்னாய் கண்ணா, பொருள் ஏதாவது விளங்குகிறதா?

**கண்ணன்:** அன்பைப்பற்றிச் சொல்கிறது என்றுமட்டும் தெரிகிறது. வழக்கம்போல நீங்களே கருத்தைச் சொல்லுங்கோ

**தாத்தா:** திருவள்ளுவர் அன்பை மனத்திலே பூட்டி (ஒளித்து) வைக்க முடியுமா என்று ஒரு கேள்வி கேட்கிறார். பின்னர் அதற்கு மறுமொழியும் சொல்கிறார்.

**கண்ணன்:** அன்பை எப்படிப் பூட்டிவைக்கலாம் தாத்தா? எங்களுக்குப் பிடித்தவர்களை (விருப்பமானவர்களை) கண்டவுடன் நாங்கள் சந்தோஷத்தில் துள்ளுவோம். அவர்கள் கவலைப்பட்டால் எங்களுக்கும் துக்கமாக இருக்கும். வள்ளுவர் என்ன மறுமொழி கூறுகிறார்?

**தாத்தா:** நீ இப்போது சொன்னதுதான் வள்ளுவரின் மறுமொழி. ஒருவர் தான் அன்பாய் இருக்கும் நண்பரோ, உறவினரோ கவலைப்பட்டுக் கண்ணீர் விட்டால், தானும் அழுவார். அது அவரது அன்பின் அளவைக் காட்டும். இப்போது நீ ஸ்ரீராமும் தாத்தாவும் இன்று அடிக்கும் புயற்காற்றினால் கஷ்டப்படுவார்களே என்று கவலைப்பட்டாயே. அது உனக்கு அவர்களிடம் இருக்கும் அன்பைக் காட்டுகிறது. இல்லையா கண்ணா?

**கண்ணன்:** இது நல்ல அதிகாரம். எல்லோரும் படிக்கவேண்டும். இப்போது நீங்கள் அதில் உங்களுக்குப் பிடித்த ஒரு குறள் சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா:** சரி கண்ணா! குறளையும் கருத்தையும் சொல்கிறேன்.
**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு**
இந்தக் குறளில் அன்புடையவர் எப்படி இருப்பார்கள் அன்பில்லாதவர்கள் எப்படி இருப்பார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது கண்ணா. அன்பில்லாதவர்கள் தங்களுக்காகவே சுயநலத்துடன் வாழ்வார்கள். மற்றவர்களுக்காக எதையுமே செய்யமாட்டாரகள். அன்பு உடையவர்கள் மற்றவர்களுக்காகத் தங்களால் முடிந்தளவு எல்லா உதவிகளையும் செய்வார்கள்.

**கண்ணன்:** எல்லா வீட்டிலும் உள்ள அம்மாமார், பாட்டிகள் தங்களுக்குக் கஷ்டம் என்று யோசிக்காமல் தங்கள் வீட்டிலுள்ள எல்லோருக்கும் எல்லாம் செய்வார்கள். என்ன தாத்தா?

**தாத்தா:** ஓம் நீ சொல்வது சரிதான் கண்ணா. ஆனால் வீட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் யார் கஷ்டப்பட்டாலும் நாங்கள் முடிந்தளவு உதவி செய்யவேண்டும். அதுதான் உண்மையான அன்பு கண்ணா. சரி, இப்போது ஸ்ரீராமை ஸ்கைப்பில் கூப்பிடு. பேசுவோம்.

**கண்ணன்:** சரி தாத்தா. நான் என் மடிக்கணினியை இயங்கவைக்கிறேன். வாருங்கோ.

(உடனேயே ஸ்ரீராமும் அவனின் தாத்தாவும் மடிக்கணினியின் திரையில் தெரிகின்றனர்)

***ஸ்ரீராம்:*** வணக்கம் கண்ணா, தாத்தா.

**கண்ணன்:** Well done. ஸ்ரீராம்! தாத்தா! காலை வணக்கம். ஸ்ரீராம் நன்றாகத் தமிழ் உச்சரிக்கிறாரே சந்தோஷம்.

**தாத்தா:** காலையில் செய்தியைப் பார்ரத்தவுடனேயே நீங்கள் எப்படி இருக்கிறீர்களென்று அறியவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தான் கண்ணன். உங்கள் வீட்டுப்பக்கம் எப்படி இருக்கிறது? காற்றுப் பலமாக இருக்கிறதே.

**சிவகுமார்:** இப்போது கொஞ்சம் காற்றின் வேகம் குறைந்திருக்கிறது. சிலநேரம் இப்படிக் கஷ்டந்தான். இன்று பள்ளிக்கூட பஸ் ஓடவில்லை. அதனால் ஸ்ரீராம் வீட்டிலேதான் இருக்கிறான்.

***ஸ்ரீராம்:*** அதனால்தான் I have a chance to talk to you today கண்ணா!

**தாத்தா:** நல்ல நண்பர்கள். இரண்டுபேரும் நன்றாக ஒட்டிக்கொண்டார்களே! நான் இப்போதுதான் திருக்குறளில் வரும் அன்புடைமை பற்றிச் சொல்லிக்கொண்டு இருந்தேன்.

**சிவகுமார்:** அன்பு என்பது மிகவும் சக்தி வாய்ந்தது. உலகையே பல விதத்திலும் இணைக்கும் பலமான சங்கிலி.

**தாத்தா:** ஆமாம் சிவகுமார். அன்புதான் மகிழ்ச்சியைத் தருகிறது. அன்புதான் உலகையே இயக்குகிறது. அதனாலேதான் அன்பும் சிவமும் ஒன்றென்பர் (love is God) சரி நீங்கள் பேரனுக்கு என்ன சொல்லிக்கொடுக்கிறீர்கள்?

**சிவகுமார்:** ஆத்திசூடியில் சில வரிகள், ஒரு திருக்குறள்.

**தாத்தா:** எங்கே ஸ்ரீராம்! அந்தத் திருக்குறளைச் சொல் பார்ப்போம்!

***ஸ்ரீராம்:*** **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

**கண்ணன்:** Very good. கெட்டிக்காரன். Do you know the meaning of it ஸ்ரீராம்?

***ஸ்ரீராம்:*** இப்போதைக்குக் குறள் மட்டுந்தான்; கருத்துத் தெரியாது.

**கண்ணன்:** சரி, நான் சொல்கிறேன். தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றுக்கும் முதலெழுத்து 'அ', அதுபோல கடவுள்தான் உலகத்துக்கு முதலானவர். இப்போது உன் தாத்தா அதை ஆங்கிலத்தில் உனக்குச் சொல்வார்.

**சிவகுமார்:** As the letter 'A' is the first letter of the alphabets, God is the begining of the world, சரிதானே?

**தாத்தா:** ஓமோம், நீங்கள் சொன்னால் தப்பாகுமா? உங்கள் பேரனுக்கும் இப்போது நன்கு விளங்கியிருக்கம். சிவகுமார்.

**ஸ்ரீராம்:** ஓ.... I undrstand the meaning now, எனக்கு விளங்கிவிட்டதே கண்ணா.!

**கண்ணன்:** நீயும் என்னைப்போலத் தமிழ் பேசத் தொடங்கிவிட்டாய் ஸ்ரீராம். மகிழ்ச்சியாய் இருக்கிறது.

**ஸ்ரீராம்:** ஓம் கண்ணா, நாங்கள் இப்படி அடிக்கடி பேசுவோம்.

**சிவகுமார்:** நாங்கள் மறந்தாலும் இப்போது நண்பர்கள் மறக்கமாட்டார்கள்.

**தாத்தா:** நிச்சயமாக! அதுவும் இந்த ஸ்கைப் காலத்தில் உலகில் எங்கோ பிரிந்து இருந்த உறவுகள், நண்பர்கள் எல்லாரும் ஒன்றாகிவிட்டார்கள்.

**சிவகுமார்:** உலகமே இந்தக் கைத்தொலைபேசியால் நம் கைக்குள் அடங்கிவிட்டதாக அல்லவா பேசிக்கொள்கிறார்கள்.


**தாத்தா:** சரி, பேசியது சந்தோஷம், சிவகுமார், ஸ்ரீராம்.

**கண்ணன்:** மீண்டும் சந்திப்போம் ஸ்ரீராம், தாத்தா

**ஸ்ரீராம், சிவகுமார்:** நன்றி. அடுத்தவாரம் பேசுவோம்

## சிந்திக்க:

வானத்திலிருந்து பெய்யும் பருவமழை குறைந்தால் உலகில் தானதருமங்களும் குன்றும்.
தூய்மையான உள்ளத்தில் வஞ்சக எண்ணங்களுக்குச் சிறிதும் இடங்கிடையாது.
சந்தனம் எவ்வளவு தேய்ந்தாலும் தன் நறுமணத்தைப் பிறருக்குக் கொடுக்கும்.
நல்லவர்கள் வறுமையுற்றபோதும் தம் நற்குணத்தலிருந்து மாறமாட்டார்.
உலகில் இரண்டு சாதியினரே உள்ளனர் - கொடுப்போர் உயர்ந்தோர்; கொடாதோர் தாழ்ந்தோர்.
ஒவ்வொருவரும் இறைவனின் பெயரை உச்சரிக்கிறார்கள். ஆனால் மனத்தூய்மை இல்லாமல் உச்சரித்தில் இறைவனை அடைய இயலாது.
அறம் என்னும் நீரில் நீராடி வாய்மை என்ற வாசனைத்திரவியத்தைப் பூசிக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் முகம் பேரொளியால் பிரகாசம் பெறும்.
இறைவன் நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டாதவன். முடிவில்லாத பெருமையைக் கொண்டவன். மனம், வாக்கு, காயத்தால் அறிய இயலாதவன். அவனே நமக்கு அருள் செய்வதற்காகத் தன்னைக் குறைத்துக்கொள்ளுகிறான்.



# Thirukural stories
# திருக்குறட் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்
Mrs Savithiri Anandan

## நடுவு நிலைமை
## Equity and Uprightness

### அதிகாரம்: 12 குறள்: 118 Chapter: 12 Kura; 118

**சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி**

ஏற்றத் தாழ்வுஇல்லாமல் சமமாக நின்று, தன்னிடம் வைத்த்த பொருள்களின் எடையைத் துல்லியமாக வரையறுத்துக்காட்டும் துலாக்கோல் போல, ஒரு பக்கம் சாயாமல் நேர்மையோடு நடுவுநிலையில் நிற்பதே சான்றோருக்குச் சிறப்பு ஆகும்.

To incline to neither side, but to rest impartial as the even-fixed scale is the ornament of the wise.

In the great epic, Mahabharata, Yuthistra's (Dharmar) looses in the game of dice, meant that the Pandavas had to live in exile for 13 years.

Sahadevan was the youngest of the Pandavas. He was the most knowledgeable among his brothers. He was aware of the Past, Present and the Future. He was Yuthistra's private councellor. In fact, Sahadeva was a geat astrologer and even knew about the Mahabharata battle before hand. The highlight, of all his qualities was his 'Neutrality and Uprightness'.

The so called 'Kurushetra war' was to be held between the Pandavas and the Kauravas.

Duriyodhanan, the leader of Kauravas, wanted to find an auspicious time (muhurtam) to begin the war against Pandavas so that he could win it.

Sahadevan was a great astrologer and a strong believer in his uprightness. Hence, Shakuni advised Duriyodhanan to approach Sahadevan to seek the muhurtam so that the Kauravas will be victorious.

The honest Sahadevan calculated the auspicious time for Duriyodanan despite the fact that they, the Kauravas were the enemies of Pandavas.

Then, the story goes onto say that Lord Krishna made the muhurtam to get changed by his power in order to confirm Pandava's victory.

[ Lord Krishna once asked Sahadevan; "What should be done to stop the war?".
Sahadevan replied: " Krishna and Shakuni must be tied and imprisoned, all Pandavas along with Duriyodanan sent to the forest and Karnan must be crowned as the Emperor"]

தருமர் எனப்படும் யுதிஷ்டிரன், சூதாட்டத்தில் தனது நாடு உட்பட அனைத்தையும் இழக்க நேரிட்டதில், பாண்டவர்களாகி அவனும் அவனுடைய சகோதரர்களும் 13 வருடங்கள் காட்டில் அஞ்ஞாதவாசம் (தலைமறைவு வாழ்க்கை) செய்ய நேர்ந்த கதையை அரும்பெரும் காப்பியமான மகாபாரதம் கூறுகிறது.


நடந்தவை, நடந்துகொண்டிருப்பவை, இனி நடக்க இருப்பவை என எல்லாமும் பற்றி அறிந்தவனாகவும், யுதிஷ்டிரனுடைய ஆலோசகனாகவும் இருந்தவன் சகாதேவன். இவன் பாண்டவர்களுடைய கடைசிச் சகோதரனுமாவன். இன்னும் சொல்வதெனில், பின்னர் நிகழவிருந்த மகாபாரதப் போர் பற்றி அவன் முன்கூட்டியே அறிந்திருந்தமையானது, சோதிடக்கலையில் அவனுக்கிருந்த அதீத திறமைக்கான சான்று.. சகாதேவனிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளுக்கெல்லாம் உச்சமாய் அமைந்தது அவனது நேர்மை நிறைந்த, நடுவுநிலைப் பண்பு ஆகும்.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையிலான "குருஷேத்திரப்போர்" நிகழ்வதற்குரிய சூழ்நிலைகள் அண்மித்துக் கொண்டிருந்தன. கௌரவர் தலைவனான துரியோதனன் போரை ஆரம்பிப்பதற்குரிய சரியான நாளை; நேரத்தைத் (முகூர்த்தம்) தேர்ந்தெடுக்க விரும்பினான். சோதிடத்தில் சகாதேவனுக்கிருந்த ஆற்றலையும், நடுவுநிலைமை தவறாத அவனுடைய நேர்மைப் பண்பையும் நன்றாக அறிந்திருந்தான் சகுனி. பாண்டவர்களை வெற்றிகொள்வதற்கேற்ற நாளைக் குறித்துக்கொடுக்கச் சகாதேவனை அணுகும்படி துரியோதனனுக்கு அறிவுறுத்தினான் சகுனி.

பாண்டவர்களாகிய தாம், போரில் எதிரிகளாய் எதிர்கொள்ளப்போவது கௌரவர்களையே என்பது நன்கு தெரிந்திருந்தும், அதை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, கௌரவர்களின் தலைவனான துரியோதனனுடைய வேண்டுகோளின்படி, நல்ல நாள் ஒன்றைச் சகாதேவன் குறித்துக் கொடுத்தான். நடுவுநிலைமை தவறாத நேர்மைப்பண்புக்கு மகாபாரதக் கதையின் சகாதேவன் பாத்திரம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பின்னர், கிருட்டினர் தனது தெய்வீக வல்லமையினால் இந்த முகூர்த்தத்தை மாற்றியமைத்து பாண்டவர்களுடைய வெற்றிக்கு வழி செய்தார் என்பதைக் கதை சொல்கிறது.

சகாதேவனிடம் கிருட்டினர் ஒரு கேள்வி கேட்டார்: "சகாதேவா! இந்தப்போரை நிறுத்துவதற்கு என்ன செய்யலாம்?"
இதற்குச் சகாதேவன் சொன்ன பதில்: "கிருட்டினனையும் சகுனியையும் சிறையில் கட்டி வைத்து, துரியோதனனையும் பாண்டவர்களையும் வனவாசம் போகச்செய்து, கர்ணனை முடிசூட்டி அரசனாக்கவேண்டும்".


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர நகைச்சீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14-01-2017 அன்று வெளியிடப்படுகிறது.